Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY — தேசிய தினசரி

போன் 389 — தபாற் பெட்டி எண்: 46

செவ்வாய்க்கிழமை — இதழ் 308

மலர் 3 — யாழ்ப்பாணம் — பிலவ — தை 24 ஆம் நாள் ஷஃபான் 30 (6-2-62)

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# ஒஸ்ஸி கொரியாவும் கைதானார்

## சதித்திட்டம் சம்பந்தமாக இதுவரை 24 பேர் கைது

கொழும்பு, திங்கள்

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகச் சதிசெய்ததாகக் கருதப்படும் திட்டத்தில் சம்பந்தப்பட்டதாக திரு. ஒஸ்ஸி கொரியாவும் இன்று கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சதித்திட்டம் சம்பந்தமாக இதுவரை 24 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொலைவழக்கில் திரு. ஒஸ்ஸி கொரியா ஒரு முக்கிய சாட்சியாக இருந்தார். காலஞ்சென்ற பிரதமர் கொலைசெய்யப்பட்டபின் பார்லிமெண்டில் நடைபெற்ற விவாதத்தின்போது திரு. ஒஸ்ஸி கொரியாவை ஏன் கைதுசெய்யவில்லை? என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலர் கேட்டனர்.

பண்டாரநாயக்கா கொலைவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு சுப்ரீம் கோர்ட்டால் விடுதலை செய்யப்பட்ட அநுரா டி' சில்வா நேற்று கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சதித்திட்டம் சம்பந்தமாக விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்படுகிறது

### கிரகங்கள் பிரிந்தன

யாழ்ப்பாணம், செவ்வாய்

சென்ற சனிக்கிழமை மாலை ஒன்றுகூடிய எட்டுக்கிரகங்களும் நேற்று திங்கட்கிழமை மாலை 5.47 மணிக்கு முன்னர் போல் தனியாகப் பிரிந்தன.

### ராஜன்பாபு குணமடைகிறார்

புதுடில்லி, பெப். 5

ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரப் பிரசாத்தின் உடல்நிலை சீர்திருந்தி வருகிறது என அவரைப் பரிசோதித்துவரும் டாக்டர் குழு அறிவித்தது.

ஆனால் அவரது கண்நோய் ஓரளவு இருந்து வருவதாய் அவர்கள் அறிவித்தனர்.

### நியூகினியில் சூரியகிரகணம்

லண்டன், பெப். 5

நியூகினியில் முழுச் சூரியகிரகணத்தை விஞ்ஞானிகள் அவதானித்தனர். இருட்டில் சுக்கிரனையும், செவ்வாயையும்அவர்கள் ஒன்றாகப் பார்த்தனர். 500 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் இவ்வித சோக்கையைப் பார்க்கலாமென அறிவிக்கப்பட்டது.

### அமெரிக்கா அனுமதிக்காது

நியூயோர்க், பெப் 5

மேற்கு இரியானுக்குத் துருப்புக்களையும் ஆயுதங்களையும் கொண்டு செல்லும் டச் விமானங்களை இனி அமெரிக்கப் பிரதேசத்தில் இறங்குவதற்கு அனுமதிப்பதில்லையென்று அமெரிக்க அரசாங்கம் அறிவித்துள்ளது.

### திருமலைக் கச்சேரி மாற்றம்

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலைக் கச்சேரி, பழைய கட்டடங்களிலிருந்து ப்ரெட்ரிக்கோட்டைக்குமாற்றப்பட்டுள்ளது. கச்சேரியின் தேர்தல் கிளை இன்னமும் பழைய கட்டடத்திலேயே இருந்து வருகிறது. இருவார காலத்துள் தேர்தல் கிளைக் "கந்தோரும் "ப்ரெட்ரிக்"கோட்டைக்குஎடுத்துச் சொல்லப்படுமெனத் தெரிகிறது.

---

கெய்ரோ, பெப். 5

யூகோஸ்லேவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோவும் ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸரும் இன்று சந்தித்து இரண்டரை மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## அரசாங்க ஊழியராக விரும்பாத ஆசிரியர் ராஜினமாச்செய்யவேண்டும்?

யாழ்ப்பாணம், செவ்.

ஸ்தலஸ்தாபன சபைகளில் அங்கம் வகிக்கும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் மிக விரைவில் அப்பதவிகளிலிருந்து இராஜினமாச் செய்துகொள்ள விருக்கிறார்களெனத் தெரிகிறது. சில ஆசிரியர்கள் தங்கள் ராஜினமாப் பத்திரங்களை இம்மாதம் முதலாம் திகதியுடன் விலகிக் கொண்டதாகக் கொடுக்கவிருக்கிறார்கள். ஸ்தலஸ்தாபனங்களில் தலைவர் முதலிய பதவிகளை வகிக்கும் பல ஆசிரியர்கள் ஆசிரியத்தொழிலை இராஜினமாச் செய்யவிருக்கிறார்களெனவும் தெரிகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தனித்தியங்கிய சுமார் 50 பாடசாலைகளை அரசாங்கம் இதுவரையில் பொறுப்பேற்றுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

அரசாங்கம் பொறுப்பேற்ற வித்தியாதிபதியின் கீழ் இயங்கும் இப்பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஸ்தலஸ்தாபனங்களில் அங்கம் வகிக்கும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் தொடர்ந்தும் ஸ்தலஸ்தாபனங்களில் அங்கம் வகிக்க முடியாது ஏற்படும்.

இதுவரையில் பொறுப்பேற்காத பாடசாலைகளையும் வித்தியாபகுதி இம்மாத இறுதிக்குள் பொறுப்பேற்கவிருப்பதாகத் தெரிகிறது.

இதைத் தொடர்ந்து பொறுப்பேற்ற பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு வித்தியாபகுதி ஓர் சுற்றுநிருபத்தை அனுப்பி வைக்குமெனவும், அதில் அரசாங்க ஊழியராகக் கடமையாற்ற விருப்பமா என்று ஆசிரியர்களிடமிருந்து கோரப்படுமெனவும் தெரியவருகிறது.

அரசாங்க ஊழியராக இருக்கத் தமது விருப்பத்தைத் தெரிவிக்கும் ஆசிரியர்கள் ஸ்தலஸ்தாபனங்களில் அங்கம் வகிக்க முடியாதெனவும் அல்லாதவர்கள் ஆசிரியத் தொழிலை இராஜினமாச் செய்ய வேண்டி ஏற்படும் எனவும் தெரிகிறது.

## பல்கலைக்கழக சிங்களவிவாத போட்டி

பேராதனை, திங்கள்

பேராதனை பல்கலைக்கழக விடுதிகளுக்கிடையே நடைபெற்ற சிங்கள விவாத இறுதிப் போட்டியில் மார்ஸ் மண்டபத்தினர் வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக்கொண்டனர்.

"பல்கலைக் கழகத்தில் சுயபாஷை இயக்கம் வெற்றியடைந்திருப்பதற்கு விவாதப் போட்டிகளில் மாணவர்களிடையே காணப்பட்ட உயர்ந்தரமே அத்தாட்சியாகும்" என இறுதிப் போட்டியின் முடிவில் பேசுகையிற் சிங்களத்துறைப் பேராசிரியர் டி. ஈ. ஹெட்டியாராய்ச்சி கூறினர். முன்னையகாலங்களில் பட்டதாரி மாணவர்கள் சுயபாஷையில் பேசிக்கொள்வதை காண்பதே அரிது எனப்பேராசிரியர் குறிப்பிட்டார்.

இறுதி விவாதம் ஜயத்திலகா மண்டப மாணவர்களுக்கும் 'மார்ஸ்' மண்டப மாணவர்களுக்குமிடையே நடைபெற்றது.

சந்திரசிறி பீரிஸ், என்பவர் சிறந்த பேச்சாளரெனப் போற்றப்பட்டார்.

## ஜாகர்த்தாவில் மாணவர் ஆர்ப்பாட்டம்

### அமெரிக்க தூதரக ஊழியர் பலருக்கு காயம்

ஜாகர்த்தா, பெப். 5

மேற்கு இரியான் விவகாரத்தில் அமெரிக்காவின் கொள்கைக்கு ஆட்சேபம் தெரிவித்து சுமார் நூறு இந்தோனேஷிய மாணவர்கள் இன்று ஜாகர்த்தாவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மேற்கு இரியானுக்கு ஆயுதங்களையும் துருப்புக்களையும் ஏற்றிச் செல்லும் டச்சு விமானங்கள் அமெரிக்காவில் இறங்கிச் செல்வதற்கு அமெரிக்க அரசாங்கம் அனுமதியளித்ததே மாணவர்களின் இன்றைய ஆர்ப்பாட்டத்துக்குக் காரணம்.

அமெரிக்க எதிர்ப்புச் சுலோக அட்டைகளைச் சுமந்துகொண்டு ஸ்தானிகர் காரியாலயத்தின்முன் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் ஒரு கூட்டத்தில் காரியாலயத்தைக் கற்களால் தாக்கத் தொடங்கினர்.

நிலைமையை இந்தோனேஷியப் பொலிஸார் ஒருவாறு சமாளித்தனராயினும் காரியாலய ஊழியர்கள் பலருக்குக் கல்வீச்சினால் கதவு, ஜன்னல்களின் கண்ணாடிகள் உடைந்து சிதறிக் காயமேற்பட்டது. ஒரு ஊழியருக்குப் பலத்த காயம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்தோனேஷியாவில் அமெரிக்காவுக்கு எதிரான இரண்டு வருட காலத்துக்குள் இத்துடன் இரண்டாவது தடவையாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது.

அமெரிக்க அட்டர்னி ஜெனரலும் ஜனாதிபதியின் சகோதரருமான திரு. ரொபேர்ட்கென்னடி அடுத்த வாரம் ஜாகர்த்தாவுக்கு விஜயம் செய்யவிருக்கும் இச்சமயத்தில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருப்பது அமெரிக்க அதிகாரிகளுக்குக் கவலையைக் கொடுத்துள்ளது.

# தமிழ்நாடு தொகுதியும் வாக்காளர் எண்ணிக்கையும்

## சென்னை நகரில் தேர்தல் கண்ணோட்டம்

சென்னை நகரின் மொத்த வாக்காளர் தொகை 9,36,977 ஆகும். இவர்களில் 4,98,365 ஆண் வாக்காளர்கள்; 4,38,672 பெண் வாக்காளர்கள் ஆவர். சென்ற தேர்தலிலும் பார்க்க இத் தேர்தலில் மொத்த வாக்காளர் தொகையில் 15,000 வாக்காளர் அதிகரித்துள்ளனர்.

சென்னை நகரிலுள்ள 10 சட்டசபை ஸ்தானங்களுக்கு மொத்தம் 43 அபேட்சகர்கள் போட்டி போடுகிறார்கள். முன்னாள் அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் உட்பட 6 பெண் அபேட்சகர்களும் நிற்கிறார்கள். காங்கிரஸிலிருந்து 10 பேரும், தி. மு. க. விலிருந்து 9 பேரும், சுதந்திராவிலிருந்து 8 பேரும், கம்யூனிஸ்ட்டிலிருந்து ஒருவரும், ஜனசங்கிலிருந்து இருவரும், தமிழ் தேசியக் கட்சியிலிருந்து இருவரும், சோஷலிஸ்ட்டிலிருந்து ஒருவரும், பிரஜாசோஷலிஸ்டிலிருந்து ஒருவரும், சுயேச்சைகள் 9 பேரும் போட்டியிடுகிறார்கள். எந்தத் தொகுதியிலும் நேரடிப் போட்டியில்லை. சராசரியாக ஒவ்வொரு தொகுதியிலும் மூன்று அல்லது நான்கு அபேட்சகர்கள் போட்டியிடுகிறார்கள். ஆனால் தியாகராய நகரில் 8 அபேட்சகர்களும், மயிலாப்பூரில் 5 அபேட்சகர்களும் போட்டிக்கு நிற்கிறார்கள்.

பல்முனைப் போட்டியைத் தவிர்ப்பதற்காக கட்சிகளுக்கிடையே நிலவிவந்த உடன்பாட்டு முயற்சி வெற்றியளிக்கவில்லை. தி. மு. க வுக்கும் முஸ்லிம் லீக்கிற்கும் இடையில் பரஸ்பர உடன்பாடு ஏற்பட்டுள்ளது. ஆனால் தி. மு. க. சுதந்திரா கூட்டு முறிந்துவிட்டது. கடந்த தேர்தலிலும் பார்க்க இத்தேர்தலில் சுயேச்சைகள் தொகை குறைந்துள்ளது.

பார்லிமெண்ட் தேர்தலில் தென் சென்னையில் நால்வரும், வட சென்னையில் ஐவருமாக 9 அபேட்சகர்கள் இரு தொகுதிகளிலும் தேர்தலில் நிற்கிறார்கள். காங்கிரஸிலிருந்து இருவரும், சோஷலிஸ் தொழிலாளர் கட்சியிலிருந்து ஒருவம், முஸ்லிம் லீக்கிலிருந்து ஒருவரும், தமிழ்த் தேசியக் கட்சியிலிருந்து ஒருவரும், தி. மு. க. விலிருந்து ஒருவரும், சுயேச்சைகள் மூவரும் போட்டி போடுகிறார்கள். சென்னை நகரில் முஸ்லிம்லீக் முதன் முதலாக இத் தேர்தலிலேதான் போட்டி போடுகிறது. அகில இந்திய முஸ்லிம்லீக் காங்கிரசுக்கே ஆதரவளிக்க வேண்டுமென்று முஸ்லிம்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

சென்னை நகர் சட்டசபைத் தொகுதிகளில் போட்டியிடும் தி. மு. க. அபேட்சகர்களான திருவாளர்கள் நெடுஞ்செழியன், அன்பழகன், மதியழகன், என். வி. நடராஜன், திருமதி. சத்திவாணிமுத்து ஆகியோரும் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ப. ஜீவானந்தமும் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு பலத்த எதிர் அபேட்சகர்களாக விளங்குகிறார்கள். இவர்கள் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றாலும், காங்கிரஸ் தோற்றாலும் எதிர் பார்த்ததாகவே அமையும். பார்லிமெண்ட் தொகுதிகள் இரண்டிலும், தலைவர்கள் எஸ். சி. சி. அந்தோனிப் பிள்ளையும், ஈ. வே. கி. சம்பத்தும், கி. மனோகரனும் காங்கிரசின் பலத்தை எதிர்க்குமளவு செல்வாக்குடையவர்கள். பார்லிமெண்ட் தொகுதிகளில் காங்கிரசிலும் எதிர்க்கட்சிகள் அநேக ஸ்தானங்களைக் கைப்பற்ற வாய்ப்பிருப்பதாகத் தெரிகிறது.

இத் தொகுதிகளின் தேர்தல் இம்மாதம் 24-ம் திகதி நடைபெறும். 1,018 வாக்காளர் சாவடிகளில் 6,600 தேர்தல் உத்தியோகத்தர் கடமையாற்றுவர். இம் மாதம் 25-ம் திகதி 16 இடங்களில் வாக்குகள் எண்ணிக்கை நடைபெறும். 26-ம் திகதி தபால் வாக்குகள் எண்ணப்படும். அன்றே முடிவுகளும் அறிவிக்கப்படும். சென்ற தேர்தல்களில் 40 அல்லது 45 வீதமானோரே வாக்களித்திருக்கின்றனர். இத் தேர்தலில் வாக்களிப்போர் தொகை வீதம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## தொகுதிகளும் வாக்காளர் தொகையும்

தமிழ்நாட்டில் உள்ள 41 பார்லிமெண்ட் தொகுதிகளிலும் அவைகளுக்கு உள்ளடங்கிய 206 அசெம்பிளி தொகுதிகளிலும் உள்ள வாக்காளர் எண்ணிக்கை கீழே விவரமாகத் தரப்பட்டுள்ளது. விவரம் வருமாறு:-

### வட சென்னை

| | |
|---|---|
| வண்ணாரப்பேட்டை | 93,227 |
| ஹார்பர் | 75,867 |
| பேசின்பிறிஜ் | 88.197 |
| பெரம்பூர் (ரிசர்வ்) | 100,372 |
| புரசைவாக்கம் | 94,420 |
| மொத்தம் | 45,2133 |

### தென் சென்னை

| | |
|---|---|
| ஆயிரம் விளக்கு | 89,212 |
| எழும்பூர் | 84,103 |
| திருவல்லிக்கேணி | 91,895 |
| மைலாப்பூர் | 91,931 |
| தியாகராயநகர் | 128,714 |
| மொத்தம் | 485,855 |

### ஸ்ரீபெரும்புதூர் (ரிசர்வ்)

| | |
|---|---|
| பொன்னேரி (ரிசர்வ்) | 89,125 |
| மாதவரம் | 97,264 |
| சைதாப்பேட்டை | 99,689 |
| குன்னத்தூர் (ரிசர்வ்) | 85,353 |
| ஸ்ரீபெரும்புதூர் | 93,120 |
| மொத்தம் | 464,551 |

### செங்கல்பட்டு

| | |
|---|---|
| செங்கல்பட்டு | 76,660 |
| மதுராந்தகம் (ரிசர்வ்) | 88,704 |
| அச்சரப்பாக்கம் | 81,632 |
| உத்திரமேரூர் | 84,189 |
| காஞ்சிபுரம் | 98,230 |
| மொத்தம் | 429,415 |

### திருவள்ளூர்

| | |
|---|---|
| கும்முடிப்பூண்டி | 75,558 |
| திருவள்ளூர் (ரிசர்வ்) | 74,323 |
| கடம்பத்தூர் | 67,958 |
| திருத்தணி | 97,944 |
| அரக்கோணம் | 87,982 |
| சோளிங்கர் | 78,222 |
| மொத்தம் | 483,987 |

### வேலூர்

| | |
|---|---|
| காட்பாடி | 85,814 |
| குடியாத்தம் (ரிசர்வ்) | 95,430 |
| வேலூர் | 89,895 |
| விரிஞ்சிபுரம் | 82,644 |
| ஆம்பூர் ரிசர்வ் | 80,473 |
| மொத்தம் | 434,256 |

### வந்தவாசி (ரிசர்வ்)

| | |
|---|---|
| செய்யார் | 79,544 |
| வந்தவாசி (ரிசர்வ்) | 92,928 |
| பெரனமல்லூர் | 74,329 |
| ஆர்க்காடு | 82,352 |
| ராணிபபேட்டை | 87,516 |
| மொத்தம் | 416,669 |

### திருவண்ணாமலை

| | |
|---|---|
| போளூர் | 82,973 |
| ஆரணி | 79,199 |
| துரிஞ்சிபுரம் | 87,938 |
| தனிப்பாடி (ரிசர்வ்) | 100,143 |
| திருவண்ணாமலை | 99,593 |
| மொத்தம் | 449,836 |

### திண்டிவனம்

| | |
|---|---|
| சத்தியமங்கலம் | 81,583 |
| செஞ்சி | 89,586 |
| திண்டிவனம் | 88,716 |
| வானூர் (ரிசர்வ்) | 78,971 |
| வளவனூர் | 102,611 |
| மொத்தம் | 441,467 |

### கடலூர்

| | |
|---|---|
| விழுப்புரம் | 96,454 |
| உளுந்தூர்ப்பேட்டை | 92,582 |
| நெல்லிக்குப்பம் | 95,771 |
| குறிஞ்சிப்பாடி (ரிசர்வ்) | 94,688 |
| கடலூர் | 99,466 |
| மொத்தம் | 478,961 |

### சிதம்பரம்

| | |
|---|---|
| புவனகிரி | 98.927 |
| சிதம்பரம் (ரிசர்வ) | 98,043 |
| காட்டுமன்னார்கோவில் | 78,507 |
| விருத்தாசலம் | 89,987 |
| ஜெயங்கொண்டான் | 91,625 |
| மொத்தம் | 457,089 |

### திருக்கோயிலூர் (ரிசர்வ்)

| | |
|---|---|
| நல்லூர் | 88,516 |
| திருக்கோயிலூர் | 90,638 |
| ரிஷிவந்தம் (ரிசர்வ்) | 86,840 |
| நல்லக்குறிச்சி (ரிசர்வ்) | 91,251 |
| சங்கரபுரம் | 80,495 |
| மொத்தம் | 437,740 |

### திருப்பத்தூர்

| | |
|---|---|
| வாணியம்பாடி | 74,567 |
| திருப்பத்தூர் | 82,199 |
| செங்கம் | 87,698 |
| ஹரூர் ரிசர்வ் | 110,626 |
| உத்தநகிரி | 98.93 |
| மொத்தம் | 454,029 |

### கிருஷ்ணகிரி

| | |
|---|---|
| கிருஷ்ணகிரி | 101,070 |
| உத்தனப்பள்ளி | 80,827 |
| ஹோஸூர் | 92,141 |
| பென்னகரம் | 99,006 |
| தர்மபுரி | 100,35 |
| மொத்தம் | 473,079 |

### சேலம்

| | |
|---|---|
| ஏற்காடு (ரிசர்வ்) | 88,851 |
| வளப்பாடி | 79,134 |
| சேலம் I | 106,475 |
| சேலம் II | 85,254 |
| வீரபாண்டி | 80,472 |
| மொத்தம் | 440,186 |

### திருச்செங்கோடு

| | |
|---|---|
| மல்லசமுத்திரம் (ரிசர்வ்) | 75,077 |
| திருச்செங்கோடு | 93,622 |
| சங்கரி | 86,671 |
| தாரமங்கலம் | 81,524 |
| மேட்டூர் | 79,735 |
| மொத்தம் | 416,629 |

### நாமக்கல் (ரிசர்வ்)

| | |
|---|---|
| ஆத்தூர் | 88,586 |
| தலைவாசல் (ரிசர்வ்) | 78,447 |
| ராசிபுரம் | 78,535 |
| சேந்தமங்கலம் | 78 650 |
| நாமக்கல் (ரிசர்வ்) | 84,235 |
| மொத்தம் | 408,421 |

### ஈரோடு

| | |
|---|---|
| கபிலமலை | 83,804 |
| ஈரோடு | 113 885 |
| சென்னிமலை | 95,151 |
| காங்கயம் | 93,651 |
| அரவக்குறிச்சி | 91,900 |
| மொத்தம் | 478,39 |

### கோபிசெட்டிப் பாளையம்

| | |
|---|---|
| பவானி | 102,255 |
| அந்தியூர் (ரிசர்வ்) | 88,662 |
| கோபிசெட்டிப்பாளையம் | 90,839 |
| நம்பியூர் | 76,281 |
| பெருந்துறை | 77,147 |
| மொத்தம் | 435,184 |

### நீலகிரி

| | |
|---|---|
| அவினாசி | 80,832 |
| சூலூர் | 89,674 |
| மேட்டுப்பாளையம் | 79,654 |
| கூனூர் | 102,303 |
| உதகை | 100,902 |
| மொத்தம் | 405,369 |

### கோவை

| | |
|---|---|
| பல்லடம் | 92,262 |
| திருப்பூர் | 106,458 |
| தொண்டமுதூர் | 81,199 |
| கோவை I | 119,613 |
| கோவை II (ரிசர்வ்) | 109,699 |
| மொத்தம் | 509,231 |

### பொள்ளாச்சி

| | |
|---|---|
| தாரபுரம் | 100,629 |
| உடுமலைப்பேட்டை | 95,043 |
| ஆனமலை (ரிசர்வ்) | 83,197 |
| பொள்ளாச்சி | 89,012 |
| கோயில்பாளையம் | 80.628 |
| மொத்தம் | 4,48,509 |

### பெரியகுளம்

| | |
|---|---|
| கோவடக்கானல் | 90,835 |
| போடிநாயக்கனூர் | 91,637 |
| உத்தமபாளையம் | 91,097 |
| தேனி | 80,161 |
| ஆண்டிபட்டி (ரிசர்வ்) | 90,409 |
| மொத்தம் | 4,44,139 |

### மதுரை

| | |
|---|---|
| திருமங்கலம் | 91,755 |
| உசிலம்பட்டி | 99,019 |
| மதுரை கிழக்கு | 1,00,339 |
| மதுரை சென்ட்ரல் | 84,574 |
| திருப்பரங்குன்றம் | 1,10,771 |
| மொத்தம் | 4,86,458 |

### மேலூர் (ரிசர்வ்)

| | |
|---|---|
| சமயநல்லூர் (ரிசர்வ்) | 87,479 |
| மேலூர் | 94,071 |
| சோளவந்தான் (ரிசர்வ்) | 78,247 |
| நிலக்கோட்டை | 90,229 |
| வடமதுரை | 71,585 |
| மொத்தம் | 421,611 |

### திண்டுக்கல்

| | |
|---|---|
| பழனி | 86.709 |
| ஆத்தூர் | 105,727 |
| ஒட்டன் சத்திரம் | 85,019 |
| திண்டுக்கல் | 89,114 |
| வேடசந்தூர் | 94,573 |
| மொத்தம் | 4.61,142 |

### கரூர்

| | |
|---|---|
| கரூர் | 88,913 |
| குளித்தலை | 101,193 |
| நஞ்சம்பட்டி | 84,244 |
| மணப்பாறை | 98,429 |
| ஆண்டநல்லூர் | 88,951 |
| மொத்தம் | 4,6[illegible],730 |

### திருச்சிராப்பள்ளி

| | |
|---|---|
| திருச்சிராப்பள்ளி—1 | 80,761 |
| திருச்சிராப்பள்ளி—11 | 96,105 |
| ஸ்ரீரங்கம் | 94,735 |
| முசிரி (ரிசர்வ்) | 90,527 |
| உப்பிலிபுரம் | 76,113 |
| மொத்தம் | 4,38,241 |

### பெரம்பலூர்

| | |
|---|---|
| பெரம்பலூர் | 91,148 |
| வெங்கலம் (ரிசர்வ்) | 97,574 |
| லால்குடி | 98.636 |
| அரியலூர் | 96,922 |
| டி. புதூர் | 88,957 |
| மொத்தம் | 473,23 |

### புதுக்கோட்டை

| | |
|---|---|
| திருமயம் | 95,586 |
| ஆலங்குடி (ரிசர்வ்) | 81,983 |
| புதுக்கோட்டை | 90,169 |
| காரைக்குடி | 84,960 |
| திருககோஷ்டியூர் | 93,590 |
| மொத்தம் | 446,288 |

### கும்பகோணம்

| | |
|---|---|
| திருவையாறு | 86,294 |
| பாபநாசம் (ரிசர்வ்) | 86,480 |
| சலியமங்கலம் | 92.946 |
| கும்பகோணம் | 85,140 |
| ஆடுதுறை | 100,289 |
| மொத்தம் | 451,246 |

### மாயூரம் (ரிசர்வ்)

| | |
|---|---|
| கொடைவாசல் (ரிசர்வ்) | 89,549 |
| மாயூரம் | 101,27 |
| சீர்காழி (ரிசர்வ்) | 86,331 |
| பொறையார் | 85,974 |
| நன்னிலம் | 85,860 |
| மொத்தம் | 448,990 |

### நாகபட்டினம்

| | |
|---|---|
| திருவாரூர் (ரிசர்வ்) | 90,165 |
| நாகபட்டினம் | 81,721 |
| வேதாரண்யம் | 87,049 |
| திருத்துறைப்பூண்டி (ரிசர்வ்) | 97,639 |
| மன்னார்குடி | 91,755 |
| மொத்தம் | 448,329 |

### தஞ்சாவூர்

| | |
|---|---|
| தஞ்சாவூர் | 79,654 |
| கந்தர்வகோட்டை | 89,012 |
| அதிராம்பட்டினம் | 89,621 |
| பட்டுக்கோட்டை | 106,991 |
| அரந்தாங்கி | 87,801 |
| மொத்தம் | 453,079 |

### ராமனுதபுரம்

| | |
|---|---|
| திருவாடானை | 90,232 |
| சிவகங்கா | 120,400 |
| ராமனுதபுரம் | 107,593 |
| பரமகுடி | 106,426 |
| மானாமதுரை | 92,565 |
| மொத்தம் | 517,216 |


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் ஈரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

### மனேச்சர் தேவை

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக் கூட்டுறவுச் சிற்றுண்டிச் சாலைக்கு உடனடியாக ஓர் மனேச்சர் தேவையாகின்றது.

தேநீர் தயாரிக்கக் கூடிய வரும், கூட்டுறவுப் பண்டக சாலை அனுபவம் உடையவர்களும் விரும்பத்தக்கதாகும். பிணை ரூபா 500/-

சமபளம் ரூபா 100/-. தகுதிக்கேற்பச் சம்பளம் உயர்த்தப்படும்

மனுதார்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரே எனது காரியாலயத்துக்கு வரவும்.

டாக்டர் M. கனகரத்தினம்,
தலைவர்,
வைத்திய சுப்பிரின்டென்டன்ட்,
அரசினர் வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

### தேவை

மாட்டுப்பட்டி வேலையில் நல்ல அனுபவமுள்ள ஆள் தேவை. சம்பளம் மாதம் ரூபா 150/- அல்லது உணவுடன் ரூபா 100/-மாத்திரம். நேரிலோ கடிதமூலமோ விண்ணப்பிக்கவும். சரஸ்வதி மில்ஸ், 190, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


### அருப்புக்கோட்டை

| | |
|---|---|
| திருச்சுழி (ரிசர்வ்) | 90,397 |
| முதுகளத்தூர் | 124,261 |
| அருப்புக்கோட்டை | 84,265 |
| சாத்தூர் | 101,989 |
| சிவகாசி | 95,658 |
| மொத்தம் | 496,570 |

### கோவில்பட்டி (ரிசர்வ்)

| | |
|---|---|
| ஸ்ரீவில்லிபுத்தூர் (ரிசர்வ்) | 92,749 |
| ராஜபாளையம் | 103,902 |
| கோயில்பட்டி | 81,582 |
| கடம்பூர் (ரிசர்வ்) | 75,730 |
| ஒட்டப்பிடாரம் | 100,684 |
| மொத்தம் | 454,647 |

### திருநெல்வேலி

| | |
|---|---|
| தூத்துக்குடி | 95,760 |
| ஸ்ரீவைகுண்டம் | 93,753 |
| திருநெல்வேலி | 96,593 |
| கங்கைகொண்டான் (ரிசர்வ்) | 89,562 |
| ஆலங்குளம் | 95,065 |
| மொத்தம் | 470,733 |

### தென்காசி

| | |
|---|---|
| புளியங்குடி | 91,260 |
| சங்கரன்கோவில் | 89,446 |
| தென்காசி | 91,752 |
| அம்பாசமுத்திரம் | 91,697 |
| க. யம் | 93,773 |
| மொத்தம் | 457 928 |

### திருச்செந்தூர்

| | |
|---|---|
| திருச்செந்தூர் | 101,253 |
| சாத்தான்குளம் | 98,248 |
| ராதாபுரம் | 94,639 |
| நாங்குனேரி | 86,257 |
| கன்யாகுமரி | 80,196 |
| மொத்தம் | 460,593 |

### நாகர்கோவில்

| | |
|---|---|
| நாகர்கோவில் | 99,409 |
| கொளச்சல் | 88,625 |
| கில்லியூர் | 78,082 |
| பத்மநாபபுரம் | 87,977 |
| வளவன்கோடு | 76,819 |
| மொத்தம் | 430,912 |

——

## யுதாண்ட் ஹங்கேரி செல்வார்

நியூயோர்க், பெப். 5

இம்மாதம் பிற்பகுதியில் ஐ. நா. தலைமைக் காரியதரிசி திரு யுதாண்ட், ஹங்கேரிக்கு விஜயம் செய்வார் என அறிவிக்கப்படுகிறது.

# அமெரிக்காமீது கியூபா பிரதமர் தாக்குதல்

## கென்னடியின் பொருதாளார தடையின் எதிரொலி

ஹவாஞ, பெப். 5

**அமெரிக்கக் கண்ட நாடுகளின் ஸ்தாபனத்திலிருந்து கியூபாவை வெளியேற்றியதுபற்றி இங்கு நடைபெற்ற பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் கியூபா பிரதமர் திரு. காஸ்ட்ரோ கண்டனம் தெரிவித்தார்.**

சமாதான வழியை திரு. கென்னடி புறக்கணித்திருக்கிறார் என்றும், அமெரிக்கா தனது இறக்குமதியை நிறுத்தியதனல் கியூபா மக்கள் கஷ்டமடைவார்கள் என்றும் காஸ்ட்ரோ கூறினர். அமெரிக்காவை அவர் கடுமையாகத் தாக்கிப் பேசினர்.

கூட்டத்திற்கு சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் ஒரு செய்தியை அனுப்பியிருந்தார். இக்கூட்டத்தில் 10 லட்சம் பேர் கலந்துகொண்டனர்.

## அமர் கெய்ரோ திரும்பினர்

கெய்ரோ, பெப். 5

இந்தியா, பர்மா, இந்தோனேஷிய, கம்போடியா, ஆகிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்த பின் ஐக்கிய அராபியக் குடியரசின் உபஜனதிபதி பீல்ட்மார்ஷல் அமர் கெய்ரோ திரும்பினர்.

# கென்னடி-அடுலா சந்திப்பு

## காங்கோபற்றி விவாதிப்பர்

நியூயோர்க், பெப். 5

காங்கோ பிரதமர் திரு. அடுலா, ஐ. நா. ரஷ்யப் பிரதிநிதி திரு. ஸோரினைச் சந்தித்துப் பேசினர். பாதுகாப்பு சபையில் ரஷ்யா காங்கோ விவாதத்தைக் கோரியதுபற்றி இருந்துவந்த கருத்து வேறுபாடு இதன்மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாய் அறிவிக்கப்படுகிறது.

திரு. அடுலா, இன்று ஜனதிபதி கென்னடியைப் பகல் போஜன விருந்தில் சந்திப்பார். அப்போது இருவரும் காங்கோ நிலைமைபற்றிப் பேசுவார்கள்.

மேலும் கடாங்காவில் அந்நியப் படைகளை அகற்ற முழு ஒத்துழைப்பும் அளிப்பதாய் திரு. ஷோம்பே ஐ. நா. அதிகாரிகளிடம் உறுதியளித்திருப்பதாய்த் தெரிகிறது.

## அல்ஜீரிய சுயநிர்ணயத்திற்கு எதிர்ப்பு இயக்கம்

அல்ஜியர்ஸ், பெப். 5

ஜெனரல் டிகாலின் அல்ஜீரிய சுயநிர்ணயக் கொள்கைக்கெதிராக புதிய இயக்கமொன்றை பிரஞ்சுக்காரர்கள் ஆரம்பித்துள்ளனர். இயக்கத்தில் அங்கத்தினர்களாக இதுவரை அவர்கள் 3 பேரின் கையெழுத்துக்களைப் பெற்றுள்ளனர்.

அல்ஜீரியாவுடன் சுதந்திரத்திற்கு இந்திய மக்கள் காட்டிவரும் ஆதரவுக்காக, இந்தியாவிலுள்ள அல்ஜீரிய தேசியவாதிகள் பிரதிநிதி நன்றி தெரிவித்துக்கொண்டார்.

# "குருஷ்சேவின் அதிகாரம் ஸ்திரமாய் இருக்கிறது"

## ரண்டால்ப் சர்ச்சில் கருத்து

லண்டன், பெப். 5

சோவியத் ரஷ்யாவில் திரு. குருஷ்சேவின் அதிகாரம் ஸ்திரமாய் இருக்கிறது என சர். வின்ஸ்டன் சர்ச்சிலின் புதல்வரான திரு. ராண்டால்ப் சர்ச்சில் "நியூஸ் ஆப் தி வேல்ட்" என்ற பத்திரிகையில் எழுதியிருக்கிறர்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

"அதிகார சுக்கானை குருஷ்சேவ் இன்றும் உறுதியாகப் பிடித்திருக்கிறர். சோவியத் விவசாயத்தில் ஏற்பட்ட தோல்விதான் ஆக்கபூர்வமான ராஜதந்திரி என்ற முறையில் அவருக்குப் பெரிய தலையிடியாக இருக்கிறதே ஒழிய, வேறு எதுவும் இப்போது இல்லை."

## மேஜர் ஜெனரல் கெண்டத்

பஞ்சிம், பெப். 5

கோவா ராணுவ கவர்னரின் மேஜர் ஜெனரல் கெண்டத், டாமனுக்கு விஜயம் செய்தார். அங்கு மாண்ட 4 இந்திய வீரர்களின் நினைவுச் சமாதியில் அவர் மலர் வளையம் வைத்தார்.

## இளைஞர்களுக்கு எம். பி. யின் அறிவுரை

மட்டக்களப்பு, திங்கள்

"அரசாங்க ஊழியர்களாக நாம் வரவேண்டும் என்ற எண்ணம், வேலை எதுவுமின்றி இருக்கும் படித்த இளைஞர்கள் மனதில் இடம்பெறக்கூடாது. எங்களது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில்தான் நீங்கள் முழுக் கவனம் செலுத்தவேண்டும்." என்று மட்டக்களப்பு கல்லடி வீதியிலுள்ள இளைஞர் விளையாட்டுக் கழகமொன்றைத் துவக்கிவைத்த மட்டக்களப்பு முதல் எம். பி. திரு. சி. இராஜதுரை கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது: "இளைஞர்கள், பல விளையாட்டுத் துறைகளிலும் பங்குபற்றுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனல், அதே ஆர்வம் நாட்டின், சமுதாயத்தின் பொருளாதார முன்னேற்றத்திலும் இருக்கவேண்டும் என்பதைத்தான் நான் வற்புறுத்துகிறேன்."

## நியூகினியில் டச்சு படை பலபெருக்கம்

ஜாகர்த்தா, பெப். 5

சிவிலியன் உடைகளுடன் 100 டச்சுத் துருப்புக்கள் விமானமூலம் மேற்கு நியூகினியில் இறக்கப்பட்டதாய்க் கூறப்படுகிறது. இதே சமயம் 2500 டன் டச்சு நாசகாரி ஒன்றும் மேற்கு நியூகினியை நோக்கிச் செல்வதாய் அறிவிக்கப்பட்டது.

## லாவோஸ்

லண்டன், பெப். 5

லாவோஸில் போர் நித்தத்தை ஏற்பாடு செய்ய சர்வதேசக்கட்டுப்பாட்டுக் கமிஷனை 3 தரப்பு ராணுவப் பிரதிநிதிகளும் உடன் சந்திக்க வேண்டுமென அமெரிக்க, ரஷ்யத் தூதர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். இடதுசாரித் துருப்புக்கள் அங்கு தாக்குதலை வலுப்படுத்தியிருப்பதாய்க் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## ஹங்கேரியின் வர்த்தக காரியாலயம்

கொழும்பு, திங்கள்

ஹங்கேரிய அரசாங்கம், விரைவில் இலங்கையில் வர்த்தக காரியாலயம் ஒன்றை நிறுவும் எனத் தெரிகிறது. இதற்கு விசேஷ வர்த்தக கமிஷனர் ஒருவரும் நியமிக்கப்படுவார்.

## கர்ப்பிணியின் வயிற்றில் நாகம்?

ஹட்டன், திங்கள்

அஷ்ட கிரகங்களின் சேர்க்கையினல் ஏற்படக்கூடிய தீமைகளை நிவர்த்திசெய்யும் நோக்கத்துடன் பட்டினப் பகுதிகளிலும் தோட்டப் பகுதிகளிலுமுள்ள கோவில்களில் இன்று விசேஷ பூசைகள் நடைபெற்றன. இரு பௌத்த பிக்குகள் இது சம்பந்தமாக விரும்பினேருக்கு நூல் கட்டுவதிலீடுபட்டிருந்தனர்.

பூஜைகள், சம்பிரதாயங்களிலும் பார்க்க நகரத்திலும் தோட்டப்புறத்திலும் காட்டுத்தீபோலப் பரவியிருந்த கதையொன்று பொதுமக்களிடையே பெரிதும் பரபரப்பை உண்டு பண்ணியுள்ளது.

ஹட்டன் பகுதியில் கர்ப்பந்தரித்திருந்த ஒரு பெண்ணைப் பரிசோதனை செய்தபின்னர். அவர் கர்ப்பத்தில் இரட்டைக் குழந்தைகள் இருப்பதாக டாக்டர் ஒருவர் கூறியிருந்தாராம். இரு குழந்தைகளுக்குமிடையே ஒரு நாகபாம்பு இருப்பதாகவும் அவர் கூறியிருந்தாராம். ஞாயிற்றுக்கிழமையன்று இந்தப் பிள்ளைகள் பிறக்கும் என எதிர்பார்க்கப்பட்டதாம் கிரக சேர்க்கையன்று குழந்தைகள் பிறந்ததும், தாயார் இறந்துவிடுவார் எனவும், சிறகுகள் முளைத்த நாகபாம்பு பறக்கும் என்றும் நம்பப்பட்டு வந்தது.

இந்தக் கதை ஹட்டனில் கடந்த மூன்று வாரமாக எங்கும் நிலவியது. நாவலப்பிட்டிப் பகுதிக்குக்கூட இந்தக் கதை எட்டியிருந்தது.

கர்ப்பவதியைப் பரிசோதனை செய்தடாக்டரிடம் யோகி ஒருவர் சென்று, தானகவே பிள்ளைப்பேறு நடக்கும்படி விடுமாறும், சத்திரசிகிச்சை எதுவும்வழங்கவேண்டாம் எனக் கேட்டுக்கொண்டதாகவும் கதை கூறுகிறது.

அல்ஜியர்ஸ், பெப். 5

அல்ஜீரியாவில் நேற்று ஏற்பட்ட ஒரு கைகலப்பில் 18 பேர் கொல்லப்பட்டனர்.

சுதந்திரதினம்

# உலகெங்குமிருந்து இலங்கைக்கு வாழ்த்து

அநுராதபுரம், திங்கள்

14-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் இந்திய நர்த்தகி மிருணளினி சாராபாயின் நடனங்கள் இடம்பெற்றன. ஏராளமான மககள் இதைக் கண்டு களித்தனர். மாவட்ட ரீதியான கொண்டாட்டங்களில் மத வழிபாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

பல இடங்களில் தேசிய விளையாட்டுக்களும், மாணவ அணிவகுப்புக்களும் நடைபெற்றன.

உலகின் பல நாடுகளிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் கிடைத்துள்ளன.

பீகிங்கில் நடைபெற்ற இலங்கை சுதந்திர தின விருந்தில் சீன வெளிநாட்டு மந்திரி பேசுகையில், ஐ. நா.வில் சீனப் பிரதிநிதித்துவத்தை இலங்கை ஆதரித்து வருவதற்கு நன்றிதெரிவித்துக்கொண்டார்.

# மேலும் 2 பேருக்கு அம்மை நோய்

கொழும்பு, திங்கள்

கிருண்ட்பாஸ் சென்ட் ஜோசெப் பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவருக்கு அம்மைநோய் கண்டிருப்பதாகத் தெரிகிறது.

பிரஸ்தாப ஆசிரியர் ஜனவரி 27-ம்திகதியன்று கொழும்பு ஆஸ்பத்திரி வெளி நோயாளர் சிகிச்சைப்பகுதிக்குச் சென்றிருந்தார். சந்தேகத்தின்பேரில் இவர் அங்கொடையிலுள்ள தொற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். அவருக்குப் பெரியம்மை நோய் காணப்பட்டதாக அங்கிருந்து தெரியவந்தது.

அந்த ஆசிரியர் வெலிவித்தா பகுதியைச் சேர்ந்தவர். இந்தப் பகுதியைப் பெரியம்மை கண்ட இடமெனப் பிரகடனஞ்செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

வேருவலையைச் சேர்ந்த எச். யசாவதி என்னும் 9 வயதுப் பெண்ணுக்கு அம்மை நோய் கண்டதாகக் கூறப்பட்டு அங்கொடை தொற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். வேருவலை ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்த இவர் அங்கிருந்தே அங்கொடை தொற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார். வேருவலை வெளி நோயாளர் சிகிச்சைப்பகுதி மூடப்பட்டுள்ளது. வேருவலைப் பகுதியிலுள்ள வீடுகள்தோறும் சென்று சுகாதார இன்ஸ்பெக்டர்கள் அம்மை தடுப்புப்பால்கட்டி வருவதாகத் தெரிகிறது. ஏற்கனவே சுமார் 10,000 பேருக்கு பால் கட்டிவிட்டதாகத் தெரிகிறது.

இதுபற்றி சுகாதார அதிகாரியொருவர் தெரிவிக்கையில், சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் குடியேற வருபவர்களின்மூலம்தான் அம்மை நோய் இலங்கையில் பரவக் காரணமென்று கூறினர்.

கொழும்புநகரில் சுமார் 135,000 பேருக்கு அம்மைநோய் தடுப்புமருந்து கட்டப்பட்டதென்றும் நகரில் 26 பால்கட்டு நிலையங்கள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

# வேலைதேடித்தரும் ஸ்தாபனம் மூலமாகவேஆள்சேர்க்கவேண்டும்

## தனியார் துறையை அரசாங்கம் கோரும்

கொழும்பு, திங்கள்

தொழில் தேடித் தரும் கந்தோர்கள் மூலமாகவே தொழிலாளரைச் சேர்த்துக்கொள்ளுமாறு தனிப்பட்ட தொழில் துறையாளர்களை அரசாங்கம் கேட்கவிருக்கிறது. தனிப்பட்ட தொழில் துறையாளர்கள், தொழில் கந்தோர்களில் பதிவு செய்து கொள்ளாதவரையும் நேரடியாக நியமனம் செய்து வந்துள்ளது. அவ்வாறன்றி தொழில் காரியாலயங்கள் மூலமாகவே தொழிலாளரைச் சேர்த்துக்கொள்ளுமாறு அரசாங்கம் அவர்களிடம் கேட்கவிருக்கிறது. பெரும்பாலான வர்த்தக ஸ்தாபனங்களும் தொழிலாளரை நேரடியாகவே சேர்ந்துகொள்ளுகின்றன என தொழில் தேசியசேவை இலாகா அதிகாரியொருவர் கூறியுள்ளார். ஒரு சில தொழில் வல்லுனர் கிடைக்காதவிடத்துத் தான் இத்தாபனங்கள் தொழில் கந்தோரின் உதவியை நாடுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

வேலை இல்லாதவர்கள் தமக்கு ஏற்ற வேலைகளை அரசாங்கத் துறையிலும் தனிப்பட்ட துறைகளிலும் தேடிக்கொள்வதற்கு உதவும் நோக்கத்துடன் அதிக செலவில் தொழில் கந்தோர்கள் நடாத்தப்பட்டு வருவதாக அந்த அதிகாரி கூறினர்.

தனிப்பட்ட ஸ்தாபனங்கள் ஒத்துழைக்கத் தவறினல், தொழில் கந்தோர்கள் மூலம் தொழிலாளரை அமர்த்திக் கொள்வதைப் பார்வையிடுவதற்கென ஒரு சபை நியமிக்கப்படலாம் என அந்த அதிகாரி கூறியுள்ளார்.

# இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் இரத்த தட்டுப்பாடு

## கொழும்புக்கு அனுப்புவதே காரணமாம்

இரத்தினபுரி, திங்கள்

கொழும்பு ஆஸ்பத்திரிக்கு மேலதிகமாகத் தேவைப்படும் இரத்தம், இரத்தினபுரி ஆஸ்பத்திரி இரத்த வங்கியிலிருந்து பெறப்படுவதால் இரத்தினபுரி ஆஸ்பத்திரியில், இரத்தத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இரத்தினபுரி ஆஸ்பத்திரி பல நவீன சாதனங்களும் இணைக்கப்பெற்ற ஆஸ்பத்திரியாகும். சப்ரகமுவா மாகாணத்து மக்கள் அனைவரின் உபயோகத்துக்கும் உதவக்கூடிய அளவில் இந்த ஆஸ்பத்திரியில் வசதிகள் உள்ளன. பல நோயாளருக்கு சிகிச்சை வழங்கும் ஆஸ்பத்திரியாகையால் இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் தினமும் இரத்தம் தேவைப்படுகிறது.

மணி வாக்கு
'அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்.'

# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
தை மீ 24உ (6-2-62)

## தொழில் நுட்பக் கல்வி

இலங்கையின் தேசிய அபிவிருத்தித் திட்டங்கள் நாட்டின் தேவைகளுக்கு உகந்தமுறையில் வகுக்கப்படவேண்டுமென்பதை நாம் இங்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துக்காட்டியுள்ளோம். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கல்வி, விஞ்ஞான, கலாசார, தொழில் நுட்பக் கல்விக்கமிஷனின் ஆலோசகரான திரு. டபிள்யு. ஜே. பேக்கரும் இக்கருத்தையே வலியுறுத்தியுள்ளார். இலங்கை அரசாங்கத்தின் அழைப்பையேற்று தொழில் நுட்பத்துறையில் நாட்டுக்கு வேண்டிய தேவைகளை நேரில்கண்டு அறிந்த திரு. பேக்கர் தமது அறிக்கையில் முழுமையான தொழில் நுட்பப் பயிற்சிக்குத் திட்டமொன்று இலங்கைக்கு அவசியமெனக் குறிப்பிட்டுள்ளார்.

இப்போது நாட்டில் தனிப்பட்ட முறையிலும் அரசாங்கத்தின் ஆதரவிலும் தொழில் நுட்பப் பயிற்சித் திட்டங்கள் அமுலில் இருந்துவருகின்றன. ஆனால் அவை ஒன்றோடொன்று எவ்வித தொடர்புமின்றியிருப்பதால் அவற்றால் நன்மையேற்படமாட்டாதென்பதை திரு. பேக்கர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தொழில் நுட்பப் பயிற்சிக்கான அறிவூட்டும் முறைகளிலும், பயிற்சியாற் கிடைக்கும் தகுதிகள் சம்பந்தமாகவும் இவை ஒன்றோடொன்று தொடர்புகொள்வதில்லையென திரு. பேக்கர் கூறியிருப்பதில் அரசாங்கம் கவனம்செலுத்த வேண்டும்.

தனி மனிதனின் பொருளாதாரநிலையைச் சீராக்குவதற்கு தேசிய அபிவிருத்தித் திட்டம் அவசியமென்பதை அரசினர் ஏற்கெனவே உணர்ந்துள்ளனர். அது மாத்திரமன்றி தேசிய விருத்திக்கெனப் புதிய வரிமூலம் மக்களிடம் பணமும் அறவிட்டு வருகின்றனர். நாட்டின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டுள்ள அரசாங்கம் தேசியக்கல்வி முறையின் அடிப்படையில் முழுமையான தொழில் நுட்பக் கல்வித்திட்டம் ஒன்றினை இலங்கைக்கு வகுப்பது அவசியமாகும்.

எதிர்காலத்தில் நுட்பத் தொழில்களில் ஈடுபட்டு உழைப்பதற்குத் தொழிலாளர்கள் அதிகமாகத்தேவைப்படுமென்பதை அறிந்தே திரு. பேக்கர் தொழில்நுட்பக் கலவியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார். தொழில் நுட்பத்துறையிலும் விஞ்ஞானத்துறையிலும் நாடு நிலையான நன்மைகளை அடையவேண்டுமானால், இங்குள்ள மக்களுக்கு தொழில் நுட்பப்பயிற்சி யளிக்கவேண்டுமென்பதை எவரும் ஒப்புவர். வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றவும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் தொழில்நுட்பப்பயிற்சி பேருதவியாக இருந்துவருவதை பிற நாடுகளின் வளர்ச்சியிலிருந்து நாம் நன்கு அறிந்துகொள்ளலாம்.

அறிவை மட்டும் வளர்க்கும் கல்வியால் நாடு பயனடைய முடியாதெனவும் அறிவைக் கொண்டு நாட்டின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் கல்வியே நாட்டுக்கு உகந்ததென்றும் திரு பேக்கர் சரியாக எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

தொழில் நுட்பக் கமிஷன் செய்துள்ள சிபார்சுகள் நாட்டுக்கு உகந்தவையெனக் கருதும் திரு. பேக்கர், தொழில் நுட்பக்கல்வித்திட்டம் சரிவரச் செயல்படுவதற்கு வர்த்தக ஸ்தாபனங்களும் அரசாங்க இலாகாக்களும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கண்டுள்ளார்.

நிபுணர்களின் அறிக்கைகளுடன் திருப்தியடையாமல் அவற்றைக் கூடியமட்டில் அரசாங்கம் அமுல்செய்யுமாயின் நாட்டின் பிரச்சினைகள் பலவற்றைத் தீர்ப்பதற்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் ஏதுவாக இருக்கும்.

---

# இந்தியாவின் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்

—ஆர். எல். குலாதி—

**இந்தியாவின் 3-வது ஐந்தாண்டுத் திட்டம் இந்திய மக்களின் உள்ளத்தில் ஒரு புரட்சியை உண்டாக்கும் சக்திவாய்ந்ததென 'ஈஸ்டர்ன் இகனேமிஸட்' பத்திரிகையின் உதவியாசிரியர் திரு. ஆர். எல். குலாதி இக் கட்டுரையிற் குறிப்பிட்டிருக்கின்றார்.**

மூன்றாவது இந்திய ஐந்தாண்டுத் திட்டம், நல்லவாழ்வை அடைவதற்கு இந்தியத்துணைக் கண்டத்து மக்களின் இடையறாத உழைப்பின் மற்றுமொரு படியினைக் குறிக்கின்றது. இத் திட்டத்திலே மக்களின் நம்பிக்கைகளும் அபிலாஷைகளும் அடங்கியிருக்கின்றன. முதலாவது, இரண்டாவது திட்டங்கள் பத்து வருடகாலத்தில் சாதித்தவற்றையெல்லாம், மூன்றாவது திட்டம் ஐந்தேவருடகாலத்தில் சாதிக்கமுனைந்துள்ளது.

சந்தேகமில்லாமல் இப்பெரும் பணி நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் அவசியமானதும் அதி முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும். ஆனால் இந்தியாவின் தலைவிகித வருமானம் குறைவாக இருப்பதால் உயர்ந்த இலக்கினைக் கொள்வது அவசியமாகின்றது. அபிவிருத்தியின் பொறுப்புக்களைப் போராட்டங்களை நன்கு உணர்தல், புதிய உற்பத்திச் சக்திகளை மாற்றுவித்தல், நவீன விஞ்ஞான, தொழில் நுட்பமுறைகளை அதிகமாக உபயோகத்தில் கொண்டுவருதல், நோக்கத்திலும் செயலாற்றும் தன்மையிலும் ஏற்படும் மாற்றங்கள், தன்னம்பிக்கை முதலிய பலதிறப்பட்ட காரணங்களிற்றான் திட்டத்தின் வெற்றி தங்கியிருக்கின்றது.

வருடத்திற்கு ஐந்துசதவிகித விருத்தியை அடைவதே மூன்றாவது திட்டத்தின் முதற்குறிக்கோளாகும். இதன்பயனாக எதிர்வரும் ஐந்துவருட காலத்தில் தேசியவருமானம் 30 சதவிகிதமும் தலைவிகிதவருமானம் 17 சதவிகதமும் அதிகரிக்கும். இத்திட்டத்தின் ஏனைய குறிக்கோள்கள், உணவுத் தானியங்களில் சுயதேவைப்பூர்த்திசெய்தல், கைத்தொழில்களினதும் ஏற்றுமதிகளினதும் சுயதேவைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு விவசாய உற்பத்தியை அதிகரித்தல், எஃகு, ரசாயனப் பொருட்கள், எரிபொருள், மின்சக்தி போன்ற அடிப்படைக் கைத்தொழில்களை விருத்திசெய்தல், பத்து வருடகாலத்திற்குள், மேன்மேலும் கைத்தொழிற் தேவைகளை பெரும்பாலும் நாட்டின்சொந்த வளங்களைகொண்டே பூர்த்திசெய்வதற்கான இயந்திர உற்பத்தி ஆலைகளை ஸ்தாபித்தல், நாட்டின் மனிதசக்தி வளங்களை இயன்ற அளவு உபயோகப்படுத்துதல், வேலை வசதிகள் குறிப்பிடத்தக்க அளவு பெருகுவதற்கான வழிசெய்தல், படிப்படியாகப் பெருகிவரும் சமசந்தர்ப்ப வாய்ப்புக்களுக்கு ஒழுங்கு செய்தல், செல்வநிலையிலும் வருமான அளவிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், பொருளாதார சக்தியின் சம விநியோகம் ஆதியனவாம்.

### நாட்டுநலம்

இக் குறிக்கோள்கள், நாட்டின் விருத்திக்கு இலக்கிற்கு மற்றுமொருபடி அருகே அழைத்துச் செல்வனவென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விலக்கினை அடைவதற்கு எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கைகள் வருமாறு:-

இலவசக் கட்டாயக் கல்வி முறையும் அகிலதேச ஆரம்பக் கல்விமுறையும் நோக்கி முன்னேறல், உதவிக் கல்விநிதிகளைப் பெருக்குதல், நிலவுரிமைத் திருத்ததைப்பூர்த்திசெய்தல், கிராமாந்தரங்களில் அத்தியாவசிய வசதிகளுக்கு ஒழுங்கு செய்தல், நீர்வசதிகள் வழங்கல், பள்ளிக்கூடமும் இணைப்புப் பாதையும் அமைத்தல், வேலையில்லாப் பிரச்சினையையும் குறைந்தவேலை நிலைப் பிரச்சினையும் தீர்ப்பதற்கு கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தையமைத்தல், கிராமியக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல், தொழிற்சாலைகளை நாடெங்கும் பரவலாக அமைத்தல், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை விஸ்தரித்தல், சமூதாயத்தின் நலிந்தவரான குழந்தைகள், மாதர்கள், அங்கவீனர்கள், நோயாளர்கள், அபிவிருத்திகுன்றிய வகுப்பினர் ஆகியோரின்பாதுகாப்புக்கான நடவடிக்கைகள்.

எதிர்வரும் ஐந்து வருட காலத்தில் எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கைகளின் ஓரளவு விரிவானவிளக்கத்தைக்கொண்டிருப்பதோடு இத் திட்டம் கடந்த பத்து வருடகாலத்தில் நாடு அடைந்துள்ள பொருளாதார, சமூக அபிவிருத்தியின் மதிப்பீட்டையும் கொண்டுள்ளது. கடந்த பத்துவருடகாலச் சாதனைகளை நோக்குகையில் அவை மகத்தான சாதனைகள் எனக் காண்கிறோம். முதலாவது ஐந்தாண்டுத் திட்டம், ஏற்கனவே உருவாக்கப்பட்ட பலதிட்டங்களை எடுத்து, அவற்றைக்கட்டுக்கோப்பான பொருளாதார, சமூக அபிவிருத்தித் திட்டமாக அமைத்தது. விவசாயம், நீர்ப்பாசனம், மின்சார சக்தி, போக்குவரத்து ஆகியவற்றிற்கு முக்யத்துவம் கொடுப்பதன்மூலம் இத்திட்டம், வருங்காலத்தின் துரிதமான பொருளாதார கைத்தொழில் அபிவிருத்திக்கான அடிப்படையை உருவாக்குவதையே நோக்கமாகக்கொண்டுள்ளது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியிலேயே சமூக மாற்றங்களும் ஸ்தாபனச் சீர்திருத்தங்களும் வகிக்கும் நிலையை வலியுறுத்துவதன்மூலம் இத்திட்டம் புகுத்திய சில அடிப்படைக் கொள்கைகள் இரண்டாவது திட்டத்தின்கீழ் மேலும் விருத்தி செய்யப்பட்டன. இந்தியாவில் ஏற்கெனவேபெறக்கூடிய இயற்கை வளங்களை உபயோகிக்கும் மூலத்தொழில்களுக்கும் இயந்திர உற்பத்தித் தொழில்களுக்கும், இரண்டாவது திட்டம் விசேஷ முக்கியத்துவம் அளித்தது.

### அபிவிருத்தி வேகம்

இது எதிர்வரும் 15 அல்லது 20 வருடகாலத்தில் இந்தியப் பொருளாதார அபிவிருத்தி வேகத்தை அதிகரிக்கும் உபாயத்தின் அத்தியாவசியமானதொரு அம்சமாகும். இதன்பயனாக் கடந்த பத்துவருடகாலத்தில் பரந்த முன்னேற்றம் ஏற்பட்டது. உதாரணமாக விவசாய உற்பத்தி கிட்டத்தட்ட 41 சதவிகிதத்தாலும் உணவுத் தானிய உற்பத்தி 46 சதவிகிதத்தாலும் அதிகரித்தன. ஸ்தாபனக் கைத்தொழில்களின் சுத்த உற்பத்தி ஏறக்குறைய இருமடங்காகியது. பொதுத் தரப்புத் தொழில்களின் பங்கு 1.5 விகிதத்திலிருந்து 8. 4 விகிதமாக அதிகரித்தது. இப்பெருக்கம் எஃகு, நிலக்கரிச் சுரங்கமறுத்தல், கனத்த ரசாயனப் பொருட்கள் போன்றஅதி முக்கியத் தொழில்களில் காணப்படுகின்றது. கல்வி, தொழில் நுட்பப் பயிற்சி வசதிகள்மேன்மேலும் பரவியதுமட்டுமன்றி வைத்தியசாலைகள், மருத்துவசாலைகளின் தொகை குறிப்பிடத்தக்க அளவு கூடியுள்ளது பத்துவருடத்தில் தேசிய வருமானம் 42 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்தைப் போலவே மூன்றாவது திட்டத்திலும் முன்னேற்றம் அடைவதென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொருத்தமாக விவசாயத்திற்குப் பிரதான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்தின் தேவைகளையும், பிரச்சினைகளையும் கடந்தகால அபிவிருத்தி முன்னேற்றத்தையும், வளர்ச்சிச் சக்தியையும், வளங்களையும் கருத்தில் கொண்டே அவ்வவ்மாநிலங்களுக்கான திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பஞ்சாயதிராஜ்(கிராமியசுதந்திரம்) நாடெங்கும் அமைக்கப்படுவதோடு 1963-ம் வருடமுடிவுக்குள் சமுதாய நல அபிவிருத்தித்திட்டம் ஒவ்வொரு கிராமத்தையும் உள்ளடக்கும். தொழில் பகுதியில் 170 லட்சம் புதியவர்கள் வந்தடையும்அதே சமயத்தில் 140 லட்சம் பேர்களுக்கு வேலைவசதிகள் அளிக்கப்படும். முக்கியமாக கிராமப் புறங்களில், விசேஷ அபிவிருத்தவேலைத் திட்டங்கள் நிறுவுவதன் மூலம் இப்போதாக் குறையை நிவர்த்திசெய்யமுயற்சிக்கப்படும். வளர்ச்சிச் சக்திகள், தேவைகள், கிடைக்கப்பெறும் வளங்கள் ஆகிய வற்றிற்கு ஏற்பவே மூன்றாவது திட்டதின் இலக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. திட்டத்தின் முக்கிய இலக்குகள் சிலவருமாறு:-

### முக்கிய இலக்குகள்

உணவுத்தானிய உற்பத்தி 10 கோடி தொன். நீர்ப்பாசனப் பரப்பு—9 கோடி ஏக்கர், எஃகுக் கட்டிகள் 92 லட்சம் தொன், இயந்திர உபகரணங்கள்—ரூ. 30 கோடி, பெற்றோலியப் பொருட்கள்—99 லடசம் தொன், ஆலைத்துணி... 580 கோடி யார், கைத்தறியும், காதியும், 350 —கோடி யார், இரும்புச் கனி—3கோடிதொன் நிலக்கரி— 9கோடி 70லட்சம் தொன், ஏற்றுமதிகள் வருடத்திற்கு —ரூ 740 கோடி, மின் சக்தி—1கோடி27லட்சம் கிலோ வாட்ஸ், புகையிரதப் பொருளேற்றும் ஆற்றல் — 24 கோடி 50 லட்சம் தொன், கப்பல் சேவை 10.9 லட்சம் மொத்தப் பதிவுநிறை, பொதுக் கல்வி (பள்ளிக்கூட மாணவர்கள்)6 கோடி 39 லட்சம், பாவிப்பு அளவுகள் (உணவு) நாளொன்றுக்கு தலைக்கு 2,300 கலோறிகள், துணி வருடமொன்றுக்குத் தலைக்கு 17.2யார்கள்.

ஒவ்வொரு பகுதியிலும் அப்பகுதியின் தலைப்புக்களிலும் ஆகும் பணச்செலவைக் கணிப்பதில் அதிகக் கருத்தும் கவனமும் எடுக்கப்பட்டுள்ளது. முதலீட்டுக்கு வேண்டப்படும் பணத்தொகை ரூ. 11, 600 கோடி ஆகும்.

இதில் பொதுத தரப்பின் பங்கு ரூ. 7,500 கோடியும்தனியார் தரப்பின் பங்கு ரூ4,100 கோடியுமாகும். பொதுத தரப்பிற்கு ஒதுக்கப்பட்டதில் ரூ 6,300 கோடியே புதிதாக முதலீடு செய்யப்படவேண்டியதும் எஞ்சிய ரூ. 1,200 கோடிநடப்புக் கருமங்களில் செலவாகுமாம். வரிவசூல் தொகை ரூ. 1,700 கோடியும் அந்நியஉதவி நிதி ரூ. ரூ. 2,030 கோடியும் என மதிக்கப்பட்டுள்ளன. பல்வேறு தலைப்புக்களின் கீழ் ஒதுக்கப்பட்ட சில முக்கிய்முதலீடுகள் பின்வருமாறு:-

விவசாயமும் சமுதாய நல அபிவிருத்தியும்—ரூ. 1,068 கோடி, கிராமிய கைத்தொழில்களும் வேறுசில கைத்தொழில்களும்—ரூ, 264 கோடி, ஸ்தாபனக் கைத்தொழில்களும் கனிப்பொருள் தொழில்களும்-ரூ. 1,520 கோடி; சமூகசேவைகளும் சில்லறைமுயற்சிகளும்-ரூ 1,300 கோடி; போக்குவரத்துச் சாதனங்கள்-ரூ. 1,486 கோடி; பொருட்பட்டிகள்- ரூ. 200 கோடி.

மேற்குறிப்பிட்ட பணத்தொகைபெறப்படும் வகைகள் பின்வருவன:-

மேலதிக வரிவசூலைத் தவிர்த்து நடப்புவருமானத்தில் எஞ்சியது ரூ. 550 கோடி, புகையிரதப் பகுதியிலிருந்து பெறக்கூடிய வருமானம் ரூ 100 கோடி வேறு பொதுத்தரப்பு முயற்சிகளில் பெறக்கூடிய இலாபம் ரூ. 450 கோடி; மக்களிடமிருந்து பெறக்கூடியகடன்தொகை சுத்தமாக ரூ. 800 கோடி; சிறு சேமிப்புக்களின் தொகை சுத்தமாக ரூ. 600கோடி; சேமலாபநிதி சுத்தமாக ரூ. 265கோடி; எஃகுத் தொழில் சமன் செய்யும் நிதி சுத்தமாக—ரூ. 105 கோடி; திட்டத்தில் சேர்க்கப்படாதசெலவுகளுக்கு மேலதிகமாகவுள்ள சில்லறை வருவாய் ரூ. 170 கோடி; பொதுத் தரப்பு முயற்சிகளின் இலாபத்தை உள்ளடக்கிய மேலதிகமான வரிவிதிப்பு. 1,710 கோடி: அந்நிய உதவியிலிருந்து விளையக்கூடிய வரவுசெலவுத்திட்டவருவாய்கள்- ரூ. 2,200கோடி; வருமானக் குறைபாட்டு நிவர்த்திப்பணம்-ரூ. 550 கோடி.

இத்திட்டத்தின் முக்கியபண்புகள் என்னவென்றால் அது இந்திய மக்களின் உள்ளத்தில்ஒரு பிரட்சியை உண்டாக்கும் சக்திவாய்ந்தது. இத்தன்மையில் தான் திட்டத்தின் வலிமைதங்கியிருக்கின்றது.

---

ஆசிரியருக்குக் கடிதம்

## இலவச வைத்தியசாலை

யாழ்ப்பாணம் மாநகரசபையால் ஒரு ஆயுள்வேத வைத்தியசாலை பல ஆண்டுகளாய் நடத்தப்படுவதுகண்டு மகிழ்ச்சி அடைகின்றோம். மாநகரசபை அங்கத்தவர் திரு. செல்லத்துரை இதில் சில திருத்தங்கள் செய்யவிரும்பி ஒரு பிரேரணை கொண்டுவரவிருப்பதைச் சில நாட்களுக்குமுன் இப் பத்திரிகையில் படித்தேன். யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கணக்கான திறமைவாய்ந்த வைத்தியர்கள் இருக்கிறார்கள். இந்த இலவச வைத்தியசாலைக்கு வேண்டிய மருந்துகளை ஒரு பட்டியல் தயாரித்து திறமையான வைத்தியர்களை அழைத்து அப் பட்டியலைச் சரிபார்த்தபின் அவற்றைத் தயாரித்துத் தரக்கூடியவர்களிடம் குறைந்த விலைக்குப் பெற ஏற்பாடுகள் செய்தல் நன்று.

யாழ்ப்பாண நகரத்தில் வட்டாரத்திற்கொரு வைத்தியசாலை நடத்தவேண்டிய அளவுக்கு நோயாளர் கஷ்டப்படுகிறார்கள்.

இரண்டாவதாக இப்பொழுது இருக்கும் வைத்தியசாலை ஒரு ஒதுக்கமான இடத்தில் நடத்தப்படுகிறது. அதிகம் மக்கள் நெருங்கியிருக்கும் இடத்திற்கு இவ் வைத்தியசாலையை அவசியம் மாற்றவேண்டுமென்பதை நகரசபை அங்கத்தவர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மூன்றாவதாக இலவச வைத்தியசாலைக்கு தினசரி வரும் நோயாளரைப் பார்க்குமிடத்து இதில் ஏதோ குறை இருப்பதாகத் தென்படுகிறது. தினசரி நூற்றுக்கணக்கான நோயாளா சில வைத்தியர்களிடம் பணம் கொடுத்து மருந்து

(5ம் பக்கம் பார்க்க)

# 'ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை கூடாது'

## பட்டினசபைத் தலைவர் கருத்து

பொல்காவலை, திங்கள்
"எந்தச் சந்தர்பபத்திலும் ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை அளிக்கக்கூடாது. அரசாங்கம் அவர்களுக்கு அரசியல் உரிமை அளிக்குமாளுல், நாட்டில் இன்னும் குழப்பமே ஏற்படும்" என பொல்காவலை பட்டின சபைத் தலைவர் திரு. எச். பி. சர்னேலிஸ் கூறினர்.

"தற்போதைய அரசியல், கட்சிப் பற்றுக்கொண்டதாக இருக்கிறது. ஒரு பாடசாலையில் 10 ஆசிரியர்கள் இருந்தால் ஒருவருக்கொருவர் வித்தியாசமான அரசியல் கொள்கையின் காரணமாக மாணவர்களுக்குச் சரியான வழி காட்டுவதில்லை.

அரசியலில் பற்றுக்கொண்ட ஆசிரியர்கள் தங்கள் தொழிலை விட்டுவிடவேண்டும்" என்றும் அவர் கூறினர்.

# 'உண்மைக்குமாருக சாட்சி கூறியதால் பட்டா இல்லை'

## முடிக்குரிய சாட்சியிடம் நீதியரசர் எச்சரிக்கை

கண்டி, திங்கள்
"உண்மைக்கு மாருன சாட்சியங்களை நீர் சொல்லக்கூடாது. உம்மீது அவர்கள் சிறிது பணத்தை எறிந்ததும், நீர் பலவற்றையும் கூற ஆரம்பித்துவிட்டீர். ஒரு சாட்சியாக உம்மை நான் மீண்டும் கோர்ட்டில் காணக்கூடாது. உமக்கு 'பட்டா' கிடையாது."

லட்சுமி தோட்டத்து கொலை, கொலை முயற்சி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம், முடிக்குரிய சாட்சி கே. பி கருணரத்ன (19)வைப் பார்த்து நீதியரசர் திரு. டி. எஸ். பெர்ணண்டோ மேற்கண்டவாறு கூறினர்.

விசாரணை முடிவில் குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி முருகசாமி என்பவருக்கு நீதிபதி பத்து வருடக் கடூழிய சிறைத் தண்டனை விதித்தார்.

நீதிபதி மேலும் தெரிவித்ததாவது:- "எதிர்பாராத விதமாக இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. உம்மைப் பற்றி நான் இன்னும் முடிவாக தீர்மானிக்கவில்லை. உண்மைக்கு மாருன சாட்சியங்களைக் கூறும் ஒருவருக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுப்பது ஒவ்வொரு நீதிபதியின் கடமையாகும். காற்றில் திரும்பிய இலையைப்போல், உமது சாட்சியங்களும் மாறுகின்றன.

வழக்கம்போல், அவர்கள் உம்மீது பணத்தை வீசியதும், நீர் ஒன்றுக்குமே பயன்படாத சாட்சியங்களைக் கூற ஆரம்பித்துவிட்டீர். உமது சாட்சியங்கள் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கின்றன. ஒரு சாட்சியாக உம்மை நான் மீண்டும் கோர்ட்டில் காணக்கூடாது. உமக்கு 'பட்டா' கிடையாது."

## உதவி மேயர் ராஜினமா

காலி, திங்கள்
காலி உதவி மேயர் திரு. விஜயநாராணய, ராஜினமாச் செய்துவிட்டார்.

# உங்கள் தினப்பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

பிலவ வருடம் தை மாதம் 24-ந் தேதி (6-2-62) செவ்வாய்க் கிழமை இரவு 2-06 வரை துதியை. அதன் பின் திருதியை. அன்று பின்னிரவு 4-45 வரை சதயம். அதன் பின் பூரட்டாதி, மரணயோகம். சுபகருமங்களை முயற்சிக்காது தெய்வ வழிபாட்டில் காலம் கழிக்குக.

## இன்று பிறந்தவர்களுக்கு

இன்று பிறந்தவர்களுக்கு இத் தினத்தில் நற்பலன்கள் சற்று குறைவாக இருக்கும். விந்தியாவிருத்திக்கான அறிகுறிகள் இருப்பினும் பணநிலைமையில் சற்றுக் கஷ்டங்களும் சொத்துக்களாலும் மாதுவழிகளாலும்கஷ்டங்களும் காணப்படும். வண்டி வாகனங்களால் நலமிருப்பினும் அவைகளால் கஷ்டங்களும் இருப்பதால் நன்மைப் பேறுகளை அதிகம் பெறுவதற்கில்லை. பெண்களுக்கும் உத்தியோகத் தருக்கும் கூட இது விசேடமாக இல்லை. தெய்வத்தை வேண்டி நிதானமாக, செலவைக் கட்டுப்படுத்தி வாழ்வது நலன் தரும்.

அச்சுவினி: இனசன ஆதரவு, குடும்ப நன்மை.

பரணி: பிரயாணக் கஷ்டம், செலவு.

கார்த்திகை: நல்லோர் சேர்க்கை, நற்செய்கை.

ரோகிணி:பிரயாணக்கஷ்டம், ஏமாற்றப்படுதல்.

மிருகசீரிடம்: தாயாதிகளால் கஷ்டம், சொத்துக்களால் கஷ்டம்.

திருவாதிரை: குடும்ப நிம்மதி, சுகம்.

புனர்பூசம்: பெரியோர் தரிசனம், வர்த்தகமேன்மை.

பூசம்: கடும் உழைப்பு, ஊதியக் குறைவு, கவலை.

ஆயிலியம்: தொழில்நன்மை, ஊழியர் ஆதரவு.

மகம் முதியோர் பகை, மனக்கவலை.

பூரம்: கடன் வரவு, காரிய சித்தி, நன்மைப்பேறு.

உத்தரம்: பணநலம், செய்தொழில் வெற்றி.

அத்தம்: கௌரவ இழப்பு, கீழோர் தொடர்பு, கஷ்டம்.

சித்திரை: பணவரவு, சுகம், செய்தொழில் நன்மை.

சுவாதி: உறவினர் பகை, மனச் சஞ்சலம்.

விசாகம்: குடும்பநலம், சந்தோஷம்.

அனுஷம்: கல்வி நலம், பணவசதி, செல்வாக்கு உயர்வு.

கேட்டை: நலக் குறைவு, தொழில் மந்தம்

மூலம்: தொழில் மேன்மை, மதிப்பு.

பூராடம்: குடும்பக்கஷ்டம், மனச்சஞ்சலம்.

உத்தராடம்: தெய்வ வழிபாடு, குடும்பப்பேறு, சுகம்.

திருவோணம்: அவப்பேச்சு, பணமுடை, சஞ்சலம்.

அவிட்டம்: பணவரவு, தொழில் வெற்றி, நன்மை.

சதயம்: நண்பர்பகை, மனக் கவலை.

பூரட்டாதி: பதவி மேன்மை, குடும்ப சந்தோஷம்.

உத்தரட்டாதி: நல்லோர் சேர்க்கை, காரியசித்தி.

ரேவதி: கடும் உழைப்பு, பயன் தாமதம், கவலை.

# மீன் களவாடியதாக வழக்கு

## தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது

சாவகச்சேரி, திங்கள்
தனங்கிளப்பைச்சேர்ந்த கதிரித்தம்பி பாலசுந்தரம் என்பவருக்குச் சொந்தமான ஒன்பது ரூபாய் பெறுமதியான மீனைக் களவாடியதாக அவ்வூரைச்சேர்ந்த இளையவன் சுப்பிரமணியம், வல்லி கந்தசாமி ஆகிய இருவர்மீது குற்றஞ்சாட்டிச் சாவகச்சேரிப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு.ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

விசாரணையில் இரு எதிரிகளும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இரண்டாவது எதிரி வல்லி கந்தசாமியை மூன்று வருடத்திற்கு இக்கடுவை சிறுவர் சீர்திருத்தப்பாடசாலைக்கு அனுப்புமாறு உத்தரவிடப்பட்டது. முதலாம் எதிரிக்கு தீர்ப்பளிப்பது ஒத்திவைக்கப்பட்டது.

# பெப் 13-ல் பிரதிநிதிகள்சபை கூடாது

கொழும்பு, திங்கள்
பெப்ரவரி 13-ம் திகதிக்கு முன்னர், ஜனப்பிரதிநிதிகள் சபையைக் கூட்டுவதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கடந்த வியாழக்கிழமையன்று ஜனப்பிரதிநிதிகள்சபையின் எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரும் (மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன கலந்துகொள்ளவில்லை) கூடிய சமயம், நாளை செவ்வாய்க்கிழமையன்று பார்லிமெண்டைக் கட்டாயம் கூட்டவேண்டுமென்று வற்புறுத்தியிருந்தன.

# சரவணையில் சூறவளி

யாழ்ப்பாணம், திங்கள்
சரவணை சின்னமடு றோமன் கத்தோலிக்க பாடசாலை கூரையும் தூண்களும் முறிந்து வீழ்ந்து பாடசாலை தரைமட்டமாகிவிட்டதாகத் தெரிகிறது. கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் ஏற்பட்ட சுழற்காற்றின் காரணமாகவே இவ்விதம் ஏற்பட்டதாகத்தெரிகிறது. இச்சம்பவம் நடைபெறுவதற்குச் சிறிது நேரத்திற்கு முன்பு பாடசாலை விட்டு ஆசிரியர்களும் மாணவர்களும் வீடுதரும்பியிருந்தபடியால் எவரும் விபத்துக்குள்ளாகாமல் தப்பித்துக்கொண்டனர்.

# இலவச வைத்திய..


(4-ம் பக்கத்தொடர்ச்சி)

பெறும்போதும் இந்த இலவச வைத்தியசாலையில் நோயாளர் வரவு மிகக் குறைவாய் இருப்பதன் காரணமென்ன?

திருத்தம் செய்யும்போது மூன்றுண்டுகளுக்கு ஒருமுறை புதிய ஒரு வைத்தியரைப் பகிரங்கமாய் தெரிவுசெய்து நியமிப்பதும் ஒரு முக்கிய திருத்தமாகும். முதலில் தொடங்கிய இந்த இலவச வைத்தியசாலை மற்றும் வட்டாரங்களுக்கும் அவசியம் தேவை என உணரக் கூடியவகையில் இயங்கினல் ஆயுள்வேத வைத்தியத்திற்கு மதிப்பும் பெருமையும் உண்டாகும்.

மேயரும் இதில் கவனம் செலுத்தி ஆயுள்வேத வைத்தியம் விருத்தியுறுவதற்கான முறையில் கரையூர் முதலிய இடங்களிலும் இரண்டொரு வைத்தியசாலைகளைத் திறந்து வைப்பது நன்றெனத்தோன்றுகிறது.

வைத்தியர்
க. சி. பரிபூரணநந்தர்
யாழ்ப்பாணம்,



# மாணவர் மலர்



மாணவர்களே!

விஞ்ஞானம் என்ற தொடரில் வெளியாகும் கட்டுரைகளைத் தொடர்ந்து படியுங்கள். 'சந்தேகம் தீருங்கள்' என்ற புதிய பகுதி மாணவர் பலரின் மனதைக் கவர்ந்துள்ளது. கேள்வி—பதில் தொடர்ந்து வெளியாகும். கேள்விகளைச் சுருக்கமாக தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள்.

'மாணவர் மலர்'
'ஈழநாடு'
த. பெ. எண். 49,
யாழ்ப்பாணம்.

விஞ்ஞானம்–2

## வண்ணத்திப் பூச்சியின் வாழ்க்கை

— மகான் —

விஞ்ஞானம் என்ற தொடரில் சென்ற கிழமை இலையைப் பற்றிப் படித்தோம். இம்முறை உயிரினத்தில் வண்ணத்திப் பூச்சியின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக ஆராய்வோம்.

உலகத்திற் காணப்படும் விலங்குகளிலும், பூச்சிகள் தொகையே மிகவும் கூடியதாகக் கருதப்படுகிறது. இவைகளிற் பெரும்பாலானவை பறக்கக்கூடியவை. வீட்டுத்தோட்டங்களிலும், பல பொது இடங்களிலும், பல நிறங்களைக் கொண்ட வண்ணத்திப்பூச்சிகளை நாம் பார்த்திருக்கின்றோம். இதில் ராசா வண்ணத்தி பெயர்பெற்றது.

வண்ணத்திப்பூச்சியின் உடலமைப்பு, தலை, நெஞ்சறை, வயிறு என மூன்றுபிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. தலையில் இரு பெரிய கூட்டுக்கண்களும் இரு உணர்கொம்புகளும் ஒரு வாயும் ஒரு தும்பிக்கை போன்ற குழாயும் காணப்படுகின்றன உணர்கொம்புகள் மலர்களின் மணத்தை அறிந்துகொள்கின்றன. பூக்களிலிருந்து தேனை உறிஞ்சுவதற்கு தும்பிக்கை பயன்படுகிறது. வண்ணத்திப் பூச்சிக்கு வாயிருந்தாலும் பற்கள் அங்கு காணப்படமாட்டா. நெஞ்சறையின் கீழ்ப்பக்கத்தில் மூன்றுசோடிக்கால்களும், நெஞ்சறையின் மேற்பக்கத்தில் இருசோடி இறகுகளும் உண்டு. கால்கள் சதைப்பற்றின்றி மென்மையாய் இருப்பதால் நடக்கவோ அல்லது ஓடவோ பயன்படுவதில்லை. பூக்களில் அமர்வதற்கு மட்டுமே இவை பயன்படுகின்றன. உட்காரும் போது, சிறகுகள் மடிந்து செங்குத்தாக இருக்கும். வயிற்றுப்பாகத்தின் முதல் எட்டுத் துண்டுகளிலும் ஒவ்வொரு சோடி சுவாசத் துவாரங்கள் (Respiratory pores) உண்டு. இதன் மூலம் வண்ணத்திப்பூச்சி சுவாசிக்கின்றது.

வண்ணத்திப்பூச்சி, மற்றப் பூச்சிகளைப்போலவே முட்டையிடுகின்றது வண்ணத்திப் பூச்சி அதன் முட்டைகளை இலைகளின் கீழ் இடுகின்றது. இதனால் மழை, சூரியவெப்பம் முதலியவற்றால் முட்டைகள் பாதிக்கப்படாமல் பாதுகாப்பாயிருக்கின்றன. ஒரு வார காலத்தில் முட்டைகள் குஞ்சு பொரித்து மயிர்கொட்டிகளாகின்றன. இது மயிர்கொட்டிப் பருவமாகும. பார்வைக்குப் புழுவைப்போல் காட்சி அளித்தாலும், பூச்சிகளின் உறுப்புக்களை இது அடைந்திருக்கும். தலையில் ஒரு சோடி உணர் கொம்புகளும், கண்களும், இலைகளை வெட்டி உண்பதற்கு கூரான இரண்டு தாடைகளும் (mandibles) உண்டு. வயிற்றுப்பாகத்தின் கீழ்ப்பக்கத்தில், நான்குசோடி பொய்க் கால்கள் காணப்படும். முதலாவது நெஞ்சறைத்துண்டிலும் முதலெட்டு வயிற்றுத் துண்டுகளிலும் சுவாசத்துவாரங்கள் இருக்கின்றன. மயிர்கொட்டி முழுவளர்ச்சி அடையுமுன்னர், ஐந்துமுறை தோல் கழற்றுகிறது. இதன்பின்னர் அதாவது ஒருமாதத்திற்குப் பின்னர் இது கூட்டுப் புழுவாக மாறுகின்றது.

கூட்டுப்புழு தன்னைச்சுற்றி ஒரு புழுவறை செய்துகொண்டு வாழ்கிறது. இதை நீங்கள் பல இடங்களில் பார்த்திருப்பீர்கள். வண்ணத்திப்பூச்சியின் புழுவுறை, பொன்போல் பளபளப்பாக இருப்பதால் அது, 'பொற்புழு' என்றும் சொல்லப்படுகிறது. சாப்பிடாமல் சத்தியாக்கிரகம் செய்வது போல், புழுவுறைக்குள் இருக்கும் புழு, உண்ணாமலும் இடம் விட்டு இடம் செல்லாமலும் உறங்கும் நிலையில் இருக்கும். புழுவுறையில் இருக்கும் கூட்டுபுழு, உருமாற்றமடைந்து வண்ணத்திப் பூச்சியின் வடிவத்தை அடைகிறது. பறந்து திரிவதற்கு சிறகுகளும், பூக்களில் உள்ள தேனை உறிஞ்சுவதற்கு குழாய்போன்ற தும்பிக்கையும், கூட்டுக்கண்களும் உண்டாகியிருக்கும். இந்தப் பருவம் பத்து, பன்னிரண்டு நாட்களுக்கு மட்டுமேயிருக்கும். அதன்பின்னர், தன்னைச் சுற்றிக்கொண்டிருக்கும் புழுவுறையை உடைத்துக்கொண்டு, வானில் வட்டமிட்டுத் திரியும் சுதந்திரப்பூச்சியாக மாறிவிடும் புழுவுறையை உடைத்துக் கொண்டு வெளிவரும் சமயம் பார்ப்பதற்கு வண்ணத்திப் பூச்சியைப்போன்றுதான் இருக்கும். ஈரலிப்பாக இருக்கும் சிறகுகள் உலரும்வரை சிறிது நேரம் புழுவுறையின்மீது தங்கியிருந்துவிட்டுப் பின்பு பறந்து விடும்.

பூச்சிகளின் வாழ்க்கை குறுகிய கால எல்லையுடையது. இதற்கு வண்ணத்திப் பூச்சி விதிவிலக்கல்ல. சிறிது காலம் சீவித்து தமது குஞ்சுகளுக்குப் போதிய உணவு கிடைக்கக் கூடிய இடங்களில் முட்டைகளை இட்டுவிட்டு பின்னர் இறந்துவிடுகிறது.

சிறுவர்கள் வண்ணத்திப் பூச்சிகளைப் பிடித்து நூலினால் கட்டி, பறக்கவிட்டு அதைக் கண்டு ஆனந்தப்படுவார்கள். ஆனால், அது படும் வேதனை சொல்லமுடியாததாகும். வண்ணத்திப்பூச்சிகள், மஞ்சள், சிவப்பு, கறுப்பு போன்ற பல நிறங்களிலும் உண்டு பலநிறங்களிலும் வண்ணத்திப்பூச்சிகள் இருப்பதால், எதிரிகளிடமிருந்து சுலபமாக அவைகள் தப்பித்துக்கொள்ளுகின்றன. உதாரணமாக, மஞ்சள் நிறம் கொண்ட வண்ணத்திப்பூச்சி அதன் எதிரியைக் கண்டால் மஞ்சள்நிற இலைகளுடனோ அல்லது மஞ்சள் நிறம் உடைய மரங்களிலோ மொய்த்துக்கொள்ளும். இதனால் எதிரி, அந்தப் பூச்சியைக் கண்டுபிடிக்கமுடியாதல்லவா? மனிதர்கள்தான் தந்திரமுள்ளவர்கள் என்று நாம் கருதக்கூடாது. பூச்சிகளும் தங்களால் இயன்ற பல தந்திரங்களையும் உபயோகித்து எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்கின்றன.

அடுத்த கட்டுரையில் ஒளி பற்றி தெரிந்துகொள்வோம்.

## சந்தேகம் தீருங்கள்

கேள்வி: கண்ணா என்ற தாவரத்தின் வேர்கள் ஏன் நிலத்துக்கு மேல் காணப்படுகின்றன?

எஸ். நரேந்திரகுமார்,
மட்டக்களப்பு.

பதில்: கண்ணா (Avicennia) போன்ற தாவரங்கள் சதுப்பு நிலங்களில்தான் வளரும். சதுப்பு நிலங்களில் (மண்ணில்) நீர் அதிகம் நிறைந்திருப்பதால், அங்கு வளரும் தாவரங்களுக்கு போதியளவு வளி(காற்று)யைப் பெற்றுக்கொள்ள முடியாது. இதனால் வேர்கள் சுவாசிப்பில் தடை ஏற்படுகிறது. சதுப்பு நிலத் தாவரங்கள் இக்குறையைப் போக்க, நிலத்துக்கு மேலாக சில வேர்களைச் செலுத்தி, சுவாசிக்கும் துவாரங்களுக்கூடாக வளி மண்டலத்திலிருந்து போதிய வளியைப் பெற்றுக்கொள்கின்றன.

∴ ∴ ∴

கேள்வி: டெலஸ்கோப்பைக் கண்டுபிடித்தவரின் பெயர் என்ன! எந்த ஊரைச்சேர்ந்தவர்? எப்போது பிறந்தார்?

எஸ். டி கங்காதரன்,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

பதில்: டெலஸ்கோப் (Telescope) என்பது ஆங்கிலப் பெயர். தமிழில் தொலை காட்டி எனப்படும். தொலைகாட்டியை இத்தாலிய விஞ்ஞானியான கலிலியோ என்பவர் கண்டுபிடித்தார். இவர் 1564ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ம் திகதி, பிசா (Pisa) என்ற நகரத்தில் செல்வாக்குள்ள குடும்பமொன்றில் பிறந்தார்.

∴ ∴ ∴

கேள்வி: சில தாவரங்கள் பூச்சிகளைப் பிடித்து உண்கின்றனவாம். அத்தாவரங்களில் இரண்டின் பெயரைக் கூறவும்.

எஸ். ரகுபதி.
கென்ற் வீதி,
கொழும்பு-5.

பதில்: தொரோசிரா (Drosera) யுற்றிக்குளரியா (Utricularia) நெபன்தஸ் (Nepanthes)

∴ ∴ ∴

கேள்வி: வேர்களின் சாதாரண இரு தொழில்களைக் கூறவும்.

ப. சிவநேசன்,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

பதில்: தாவரங்களை நிலத்தில் உறுதியாக வைத்திருப்பதற்காக பல பக்கங்களிலும் வேர்க்கிளைகள் பரப்பி நிற்பது. வேண்டிய போசனைப் பொருள்களடங்கிய நீரை, வேர்மயிர் (Root Hair) களினால் உறிஞ்சி கடத்தும் பாகத்தின் உதவியினால்தண்டிற்கு அனுப்புவது.

∴ ∴ ∴

கேள்வி: ஆண் தேனீக்கள் சோம்பேறிகளா?

கே. செல்வராஜா,
மெயின் வீதி,
திருக்கோணமலை.

பதில்: ஆண் தேனீக்கள் சோம்பேறிகளேதான். ஒரு தேன் கூட்டில் சாதாரணமாக சுமார் 250 ஆண் தேனீக்கள் உண்டு இவை வேலையொன்றும் செய்வதில்லை. இனத்தைப் பெருக்குவதற்கு உதவுவதே இவற்றின் வேலையாகும். உண்பதே இதன் முக்கிய தொழில்!

—ஸ்ரீராம்.

## இளநெஞ்சம்

— மலைத்தம்பி —

தெள்ளுத் தமிழின் இனிமையதன்
தேனிகர் சொல்லில் மிளிர்ந்து - நல
கொள்ளை அன்பில் கோடிகவி
கூடிப் பெருகி குவிந்திடுதே!

கள்ளம் கபடம் அறியாது
காசினின் பெருமை புரியாது
துள்ளும் தோற்றம் துயர் நீக்கும்
தூயக் கலையாய் புவிதன்னில்

அள்ளும் இன்ப அலைகளெலாம்
ஆன்ற கதைகள் சொல்லி - மனம்
கிள்ளும நகைப்பில் நம்மையெலாம்
கீர்த்தி யடையச் செய்திடுது!

## புகைவண்டி வந்த கதை

—ஜயா—

இன்று பிரயாணப் போக்குவரத்துக்கு புகைவண்டி எவ்வளவு உபயோகமாயிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால் இப் புகைவண்டி எப்படி உருவாயிற்று, அதைக் கண்டுபிடித்தவர் யார் என்பதைப்பற்றி நீங்கள் யோசித்ததுண்டா?

இந்தப் புகைவண்டியின் உபயோகத்திற்கு இரண்டு பேர் மூல காரணமாய் இருந்தனர். ஒருவர் நீராவியின் சக்தியை முதன் முதல் கண்டுபிடித்த ஜேம்ஸ்வாட். மற்றவர் அந்த சக்தியை புகைவண்டியில் புகுத்தி ஓட்டிக் காட்டிய ஜியார்ஜ் ஸ்டீவன்ஸன்.

ஜேம்ஸ் வாட் 5 வயதுச் சிறுவனயிருந்தபோது அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த கேத்தலின் மூடியை, நீராவி மேலும் கீழும் அசைப்பதைக் கண்டார். உடனே, ஏன் அப்படி நடக்கிறது என்பதை ஆராய்ந்தார். சிறிது காலத்திற்குப் பின் நீராவியின் சக்தியைப் பெருக்கினால் அதனால் பாரமான இயந்திரங்களை ஓட்ட முடியும் எனக் கண்டுபிடித்தார்

இந்த அடிப்படையை வைத்தே ஸ்டீவன்சன், ஒரு புகைவண்டி இயந்திரத்தைச் செய்து நீராவியின் சக்தியால் அதை ஓடச்செய்தார். முன்பு அஞ்சியவர்கள் எல்லாம இதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அதுமுதல் நாளுக்கு நாள் புகைவண்டியின் தரம் அபிவிருத்தியடைந்து உலகெங்கும் ஓடத்தொடங்கியது.

## மலை உச்சியில் பிரார்த்தனை

கெஸ்விக், பெப். 5

இவ்வாரம் உலகம் அழியும் என்று கருதி அதைத் தவிர்க்கு முகமாக வடமேற்கு இங்கிலாந்திலுள்ள ஒரு மலையுச்சியில் 7 பேர் பிரார்த்தனை நடத்தினர். பிரிட்டனிலுள்ள 9 புண்ணிய கேந்திரங்களில் ஒன்றாகக் கருதப்படும் "கொனிஸ்டன் ஓ டிமான்" என்ற பனி மூடிய மலை உச்சியில் அவர்கள் பிரார்த்தனை நடத்தினர்.

## மாணவர்களை பாடசாலையிலிருந்து விலக்கும் உரிமை

### மறுக்கப்படுவதற்கு தலைமை ஆசிரியர்கள் ஆட்சேபம்

கொழும்பு, திங்கள்

மாணவர்களைப் பாடசாலையிலிருந்து அகற்றுவதற்குத் தங்களுக்குள்ள உரிமையை வாபஸ் பெறுவது, பாடசாலையின் ஒழுங்கைப் பாதிக்கும் என அநேக தலைமை ஆசிரியர்கள் கல்வி இலாகாவுக்கு முறையிட்டுள்ளனர்.

இலாகாவின் உத்தரவுப்படி இனி பாரதூரமான குற்றங்களுக்கும் கூட, தலைமை ஆசிரியர்கள் மாணவர்களை வெளியேற்ற முடியாது. அதற்குப் பதிலாக குறித்த மாணவர்கள் பற்றிய புகாரை இலாகாவுக்கு தலைமை ஆசிரியர் அறிவிக்க வேண்டும். பாடசாலையிலிருந்து மாணவர்களை வெளியேற்றுவதை கல்வி இலாகா தான் தீர்மானிக்கும்.

மாணவர்களுக்குப் பிரம்படி கொடுக்கும் உரிமை மறுக்கப்பட்டது குறித்தும் தலைமை ஆசிரியர்கள் ஆட்சேபித்துள்ளனர்.

## சிவானந்த குருகுலம்

மன்னார், திங்கள்

சிவானந்த குருகுலம் என்ற பெயரில் இந்து குருமார்களுக்கான ஒரு பாடசாலை திருக்கேதீஸ்வரத்தில் யாழ்ப்பாணம் குமாரசாமிகுருக்களால் திறந்து வைக்கப்பட்டது.

-----

## அநாதரவான பாடசாலை

மன்னார், திங்கள்

ஆத்திமோட்டை அரசாங்க பாடசாலையில் ஆசிரியர் கிடையாது.

இப் பாடசாலையிலிருந்த ஒரு ஆசிரியர், ஜனவரி 2-ந் திகதி பாடசாலை மீண்டும் திறக்கப்பட்டது முதல் பாடசாலைக்கு வரவே இல்லை.

## சமயநெறி சூழ்நிலையில் வளர்க்க வேண்டும்

கோட்டை, திங்கள்

"வருங்காலத்தில் நாட்டைப் பாதுகாப்பவர்கள் இன்றுள்ள இளம் பிள்ளைகளாகையால், பிள்ளைகளை சமயநெறிமிக்க சூழ்நிலையில் வளர்க்க வேண்டும் பிள்ளைகளுக்குச் சமய அறிவை ஊட்டுவதால் நாட்டில் ஏற்படக்கூடிய பாவச் செயல்களையும் குறைத்துக் கொள்ளலாம்".

இவ்வாறு கலாச்சாரப்பகுதி டைரக்டர் திரு எம். ஜே. பெரேரா ராஜகிரியாவில் புதிதாக நிறுவப்படவிருக்கும் சமய போதன மண்டபம் ஒன்றுக்கு அத்திவாரக்கல் நாட்டுவது சம்பந்தமாக நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

செவ்வாய் 6-2-62

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 "இருபது கேள்விகள்" 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியநிகழ்ச்சி, 9-15 19 எஸ். பிச்சையப்பா—நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 வி. ஏ. மீனாட்சி—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கம்பன் கவிநயம், 7-45 பி. வஜ்ரவேலு முதலியார்—பாட்டு, 9-15 'தர்மதாதா'—சிறுகதை (சென்னை அஞ்சல்), 9-30 மெல்லிசை, 9-50 சங்கீத சஞ்சிகை (சென்னை அஞ்சல்).

# தோட்டப்பிள்ளைகள் மீது பாரபட்சம்

## தொழிற்சங்கங்கள் ஆட்சேபிக்கும்

கொழும்பு, திங்கள்

தோட்டப் பாடசாலை குழந்தைகள் விஷயத்தில் பாரபட்சம் காட்டப்படுவது குறித்து அரசாங்கத்திடம் தோட்டப் பகுதியிலுள்ள சகல தொழிற் சங்கங்களும் கூட்டாக ஆட்சேபனை தெரிவிக்கும்.

விரைவில் இத் தொழிற் சங்கங்கள் கூடி இவ்விஷயத்தில் என்ன நடவடிக்கை எடுப்பதென்பதை முடிவுசெய்யும். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்கனவே இது சம்பந்தமாய்க் கல்வி மந்திரியிடம் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

"டைரக்டர் நிர்வாகப் பாடசாலைகளில் தோட்டக் குழந்தைகளை அனுமதிப்பது மறுக்கப்படுகிறது. பெருமளவில் சிங்களக் குழந்தைகளைச் சேர்க்குமாறு பாடசாலை அதிபர்களுக்குக் கூறப்பட்டிருப்பதே இதற்குக் காரணம்" என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அந்த ஆட்சேபனையில் கூறியுள்ளது.

பிள்ளைகளின் பெற்றோர்கள் இலங்கைப் பிரஜைகள் என்று நிரூபிக்கப்படவில்லை என்று காரணம் காட்டியும் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறதாம்.

## உலக பல்கலைக்கழக ஸ்தாபன மகாநாடு

கண்டி, திங்கள்

உலக பல்கலைக்கழக சேவை ஸ்தாபனத்தைச் சேர்ந்த சில நிபுணர்கள், ஆசியமாணவர்களின் ஆரோக்கியம் பற்றி ஆராய்வதற்கென விசேஷ மகாநாட்டொன்றை இங்குகூட விருக்கிறார்கள். இம் மகாநாடு ஏப்ரல் மாதம் 22-ம் திகதி முதல் 29-ம் திகதிவரை பேராதனை, இலங்கைப் பல்கலைக் கழகத்தில் நடைபெறும்.

இந்த ஸ்தாபனத்தின் முதலாவது மகாநாடு, 1951 ம் ஆண்டு மலாயாவில் நடைபெற்றது. இரண்டாவது மகாநாடு இலங்கையில் நடைபெறவிருக்கிறது. இம் மகாநாட்டை, உலக பல்கலைக்கழக சேவை ஸ்தாபனத்தைச் சேர்ந்த இலங்கை தேசிய கமிட்டி ஒழுங்கு செய்துள்ளது. மொத்தம் 14 நாடுகள் இம் மகாநாட்டில் கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசிரிகள்

## நியமனம், இடமாற்றம் பற்றி அதிகாரிகளுடன் பேச்சு

### வித்தியாதரிசிகள் அனுமதியின்றி முடியாது

கொழும்பு, திங்கள்

தமது நியமனங்கள், இடமாற்றங்கள்பற்றி உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கென ஆசிரியர்கள் கல்வி இலாகாக் காரியாலயத்துக்குச் செல்லக்கூடாது எனக் கல்வி இலாகா ஒரு புதிய சட்டத்தைப் பிறப்பித்துள்ளது.

தமது பகுதியிலுள்ள பகுதி வித்தியாதரிசிகளிடமிருந்து முன்னதாகவே கடிதங்களைப் பெற்றுக்கொண்ட பின்பே இலாகா அதிகாரிகளுடன் ஆசிரியர்கள் பேச்சுவார்த்தைகளை நடாத்தலாம்.

மேற்கூறிய நியதிப்படி ஒழுகாத ஆசிரியர்கள் சம்பள வெட்டை எதிர்பார்க்கவேண்டும் எனக் கல்வி அமைச்சு விடுத்த அறிக்கையொன்று கூறுகிறது. கல்விக் காரியாலயத்துக்குச் சென்ற தினத்து சம்பளம், குறிக்கப்பட்ட ஆசிரியரின் சம்பளத்திலிருந்து வெட்டப்படுமாம்.

மலாய் வீதி, கொழும்பு 2ல் உள்ள கல்விக் கந்தோருக்கு பகுதி வித்தியாதரிசியின் கடிதமின்றி ஒரு எம். பி.யின் துணையுடனோ அல்லது செனட்டர் போன்ற ஒருவரின் துணையுடனோ செல்லும் ஆசிரியருக்கு அவரது சம்பளப்படி வெட்டப்படுவதுடன், அதிகாரிகளைக் கண்டு பேசவும் சந்தர்ப்பம் வழங்கப்படாதெனத் தெரிகிறது.




# ‘சுவாமி விவேகானந்தரின் அறிவுரை இன்று தேவை’

## டாக்டர் சி. பி. கருத்து

சென்னை, பெப். 5

“கிழக்கத்திய அறிவும் மேற்கத்திய செயல் திறனும் ஒருங்கே படைக்கப்பட்ட சுவாமி விவேகானந்தர்” என்று டாக்டர் சி. பி. ராமஸ்வாமிஐயர் நேற்று மைலாப்பூரில் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தினதரவில் நடைபெற்ற விவேகானந்தர் நூற்றாண்டுவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சுவாமி விவேகானந்தரின் உபதேசங்களைக் கொண்ட சில நூல்களின் தமிழ், தெலுங்கு மொழி பெயர்ப்பு நூல்கள் இவ்விழாவில் வெளியிடப்பெற்றன.

பழம் பெருமை பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லையென்பதையும் நாட்டின் பிரச்சினைகள் தீர வேண்டுமென்பதையும் உணர்ந்து அறிவுறுத்தியவர் சுவாமி விவேகானந்தர் என்று டாக்டர் ராமஸ்வாமி ஐயர் கூறினர்.

ஜீவாத்மாவில் கலந்திருக்கும் பரமாத்மாவை மேற்கத்தியவர்களுக்கும் உணர்த்தியவர் சுவாமி விவேகானந்தரென்றும் சுமார் எழுபது வருடங்களுக்கு முன்னர் சுவாமி விவேகானந்தர் கூறிய அறிவுரை நெருக்கடி மிகுந்த இன்றைய உலகத்துக்கு மிகப்பயன்படக் கூடியதென்றும் டாக்டர் ராமஸ்வாமி ஐயர் கூறினர்.

## “காமிரா”வை களவெடுத்ததாய் குற்றச்சாட்டு

குருநாகல், திங்கள்

குருநாகலிலுள்ள பிரபல ‘ஸ்டுடியோ’ ஒன்றில் வேலை செய்து வந்த ஜோர்ஜ் அந்தோனி பெரேரா என்பவர் அதே ‘ஸ்டுடியோ’வில் 3,000 ரூபாய் பெறுமதியான ‘காமிரா’க்களைக் களவெடுத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

குருநாகல் மாஜிஸ்ரேட்டிடம் பதிலளிக்கையில் அந்தோனி பெரேரா தமக்கு ரிமாண்ட் சிறைவாசத்தில் திருப்தியில்லை எனத் தெரிவித்ததுடன் தம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுத்தார்.

ஆனல், விசாரணை நடைபெறும்வரை ரிமாண்டை நீடித்து வைத்தபின், ரிமாண்ட் சிறையில் அவருக்குத் திருப்தி ஏற்படவில்லையென்ருல், முழு நேரமும் கஷ்ட வேலை செய்ய வேண்டிய வேறு ஒரு சிறைவாசம் அவருக்குக் காத்திருப்பதாக மாஜிஸ்ரேட் எதிரியிடம் கூறினர்.

## “இனபேதமின்றி தேசிய சேவையில் ஈடுபட வேண்டும்”

யாழ்ப்பாணம், திங்கள்

“ஒரு தேசம் முன்னேற்றம் அடைய வேண்டுமாயின் தேசமக்கள் இன, மத வேறுபாடின்றி சகோதர பான்மையுடன் தேசிய சேவையில் ஈடுபட வேண்டும். இது தேசத்திற்குப் பெரும் வெற்றியை ஈட்டிக் கொடுக்கும். பேனு பிடிக்கும் தொழில்களை எதிர்பாராது மாணவர் தேச அபிவிருத்தி வேலைகளில் அல்லும் பகலும் அயராது உழைக்க முன்வர வேண்டும்.”

இவ்வாறு ஏழாலை தெற்கு இந்து தமிழ் வித்தியாலயத்தில் தேசிய வேலையை ஆரம்பித்து வைத்த மேற்படி வித்தியாலய அதிபர், திரு. க. சுந்தரம் மாணவர்களுக்குக் கூறினர். வித்தியாலய உட்புற வேலைகளில் ஆசிரியரும் மாணவரும் பங்குபற்றினர்.

மேலும் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

எத்தொழிலைச் செய்வதிலும் நாம் பின்வாங்கக்கூடாது. நாம் நமது கடமையைச் செவ்வனே செய்யின் கௌரவம் தாமாகவே எம்மைத் தேடி வந்தடையும். தர்ம ரீதியில் செய்யும் செய்கைகள் யாவும் எமது எதிர்கால வாழ்க்கையை வளம் பெறச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

## வீட்டை உடைத்து உட்புகுந்தார்

### எதிரிக்கு 3 மாதச் சிறை

சாவகச்சேரி, திங்கள்

வண்ணன் கேணியைச் சேர்ந்த முதலி நாகமுத்து என்பவருடைய வீட்டிற்குள் களவெடுக்கும் நோக்கமாக வீட்டை உடைத்து உட்புகுந்ததாக அல்வாயைச் சேர்ந்த சின்னன் செல்லன் என்பவர்மீது குற்றம் சாட்டி பளைக் காரியாதிகாரியால் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு மூன்று மாதம் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்

●

யாழ்ப்பாணம் மனோகரா மகாலிங்கம் நடித்த நாம் இருவர்.

●

சாவகச்சேரி தேவேந்திரா ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு (தமிழ்) பேசும் படம்.


**ஈழநாடு ‘இஸ்ரேல்’ அனுபந்தம்**

★ 11-2-62-ல் வெளியாகும்

ஈழநாடு இதழுடன்

இஸ்ரேல் அனுபந்தமும் இணைக்கப்படும்

வனாந்தரத்தில் வளம் பெற்று வளர்ந்து வரும் இஸ்ரேலைப்பற்றி விபரமான கட்டுரைகளையும் அழகிய படங்களையும் தாங்கி இந்த அனுபந்தம் வெளியாகின்றது.

பக்கங்கள் 16 : தனிப்பிரதி சதம் 15


## பிக்குகளுக்கு பிரயாண வசதி

கொழும்பு, திங்கள்

பௌத்த பிக்குகள் பஸ் பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கான விசேஷ கூப்பன் அட்டைகளை இலங்கை போக்குவரத்துச் சபை பிரசுரித்துள்ளது. ‘விநாய’ நெறியின்படி பௌத்த பிக்குகள் பணம் வைத்திருப்பது தர்மமாகாது. இதன் அடிப்படையிலேயே இ. போ. ச. பௌத்த பிக்குகளுக்கு விசேஷ வசதியைச் செய்துள்ளது.

புத்தக வடிவில் பிரசுரிக்கப்பட்ட கூப்பன்கள் இ. போ. ச. டிப்போக்களில் விற்கப்படுகின்றன. 5 ரூபாய் பெறுமதியிலும் 10 ரூபாய் பெறுமதியிலும் கூப்பன் புத்தகங்கள் விற்கப்படுகின்றன. காசுக்குப் பதில் இந்தக் கூப்பன் அட்டைகளை வழங்கி பஸ பிரயாணச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம். பொதுமக்கள் வாங்கிக் கொள்ளக்கூடியதாக ‘டிப்போ’க்களில் இவை விற்பனையாகி வந்தாலும், பௌத்த பிக்குகளே இவற்றை உபயோகிக்கலாம்.

## கொலை வழக்கில் எதிரிகள் விடுதலை

கொழும்பு, திங்கள்

இரத்தினபுரியைச் சேர்ந்த பி. ஏ. சுவானெறிஸகாமியும், அவரது மனைவி அசிலின் நோனவும் இரத்தினபுரியைச் சேர்ந்த ஜீ. தேமிஸசிங்கோ என்பவரை 24-9-60 அன்று கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

கொழும்பு அசைஸ் நீதிமன்றத்தில் அசைஸ கமிஷனர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் எதிரிகள் ஆஜராகியிருந்தனர். விசாரணை முடிவில் எதிரிகளை விடுதலை செய்த திரு. ஸ்ரீஸ்கந்தராஜா இதுவரை அவர்களைக் கைது செய்து வைத்திருந்ததற்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வழக்கு சம்பந்தமான தகவல் குறிப்புகள் விசாரணை முடிவிலேயே கிடைத்தன என பிராசிக்கியூஷன் தரப்பில் ஆஜரான இன்ஸ்பெக்டர் கோர்ட்டில் தெரிவித்தார்.

# நன்கு ஆராயப்பட்ட தொழில்நுட்ப பயிற்சித் திட்டம்

## இலங்கைக்கு தேவை என்கிருர் நிபுணர்

கொழும்பு, திங்கள்

நன்கு ஆராயப்பெற்ற தொழில்நுட்ப பயிற்சித்திட்டமொன்று இலங்கைக்கு அவசியம் தேவைப்படுகிறது.

இவ்வாறு ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனத்து தொழில்நுட்பக் கல்விக் கமிஷன் ஆலோசகரான திரு. டபிள்யூ. ஜே. போக்கர் தமது அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இங்கு வந்து நான்கு மாதகாலம் தங்கியிருந்த திரு. போக்கர் சனிக்கிழமையன்று அவுஸ்திரேலியாவுக்குப் பயணமானர்.

இலாகா கார்ப்பரேஷன்களிலும், தனிப்பட்ட ஸ்தாபனங்களிலும் இருந்துவரும் ஆரம்ப தொழில் நுட்ப பயிற்சித்திட்டங்கள் ஒன்றுடனென்று தொடர்பற்றவையாக இருப்பதால் அவற்றைத் தொடர்ந்தும் மேற்கொள்ளுவது ஏற்றதாக திரு. பாக்கர் ஆலோசனை கூறியுள்ளார்.

தனி மனிதனின் பொருளாதார நிலைமையைச் சீராக்க தேசிய அபிவிருத்தி திட்டமொன்று தேவைப்படுவதால் தேசிய கல்வி முறையின் அடிப்படையில் முழுமையான தொழில் நுட்பக்கல்வித்திட்டமொன்று இலங்கைக்கு அவசியமாகத் தேவைப்படுகின்றதென அவர் தெரிவித்தார்.

தொழில் நுட்ப வேலைகளில் மக்கள் கொண்டுள்ள நோக்கம் இடைக்கிடை மாற்றப்படவேண்டியது அவசியம். பல்கலைக் கழக பட்டங்களும் தராதரங்களும் உயர்ந்த புத்தி சாதுரியத்தை எடுத்துக்காட்டுவன. ஆனல் தனி அறிவை மட்டும் எடுத்துக்காட்டும் கல்வியை விட அறிவையும் புத்தி சாதுரியத்தையும் நாட்டின் முன்னேற்றத்துக்கும் பயன்படுத்தக்கூடிய கல்வி மக்களிடையே ஊக்குவிக்கப்படவேண்டும். அறிவையும் ஆற்றலையும் நாட்டு நன்மைக்கு உபயோகிக்க வல்ல ஆர்வமும் ஆற்றலும் மக்களுக்கு இருக்க வேண்டும்.

## ஆசிரியர்கள் ஒற்றுமைக்கு வற்புறுத்து

புளியங்குளம், திங்கள்

ஆசிரியர்களாகிய நாம் ஒற்றுமையாக ஒரு கூட்டமாய் வாழாது பலபடச் சிதறுண்டு இருந்தால் நாமே நமது அடிப்படை உரிமைகளைப் பெற முடியாத ஒருநிலையைத்தேடிக் கொள்கின்றவர்கள் ஆவோம்.

வருங்கால சமுதாயத்தை உருவாக்குகின்ற நாம் இவ்விஷயத்தில் பராமுகமாயிருத்தல் கூடாது என்று புளியங்குளம் அரசினர் பாடசாலையில் இன்று நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க வவனியாக் கிளைப் பொதுக்கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசும்போது ஓமந்தை அரசினர் மகாவித்தியாலய அதிபர் திரு. செ. கந்தையா குறிப்பிட்டார்.

இந்த மாதம் பிற்பகுதியில் வவனியாக் கிளையின் பொதுக் கூட்டத்தை வவனியா சைவப் பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நடாத்துவதெனவும் அக்கூட்டத்துக்குத் தாய்ச் சங்கத் தலைவரையும் அழைப்பதெனவும் அக்கூட்டத்தில் ஆசிரியர்களின் மாற்றம் சம்பந்தமாகத் தாய்ச்சங்கத்துக்குச் சில ஆலோசனைகளைத் தெரிவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டன.


**3வது வெற்றி வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) தீபொளி (நுவரெலியா) ஜோதினி (ராகலை)

பெண்மையின் நிறைவு!
தாய்மையின் பரிவு! தன்மானத் துணிவு!
பாசத்தின் விளைவு! தியாகத்தின் முடிவு!
இத்தனைக்கும் நடுவே தத்தளித்து வெற்றி காணும்
உத்தமியின் காவியம்!
இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

**பாச மலர்**

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்)

மகாலிங்க நடித்த

**நாம இருவர்**


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.